# 1 சுற்றுலா செல்வோம்

**படத்தை அவதானியுங்கள், கலந்துரையாடுங்கள்.**




கொழும்பு - திருகோணமலை
265.4 கி.மீ

சராசரி வெப்பநிலை
27.8$^o$C

திருகோணமலையின் சனத்தொகை
340,158

தமிழர்கள்
93,132 (36.39%)

சிங்களவர்கள்
85,503 (33.41%)

முஸ்லிம்கள்
75,039 (29.32%)

1. நிறந்தீட்டப்பட்டுள்ள மாவட்டம் எது?

2. நிறந்தீட்டப்பட்டுள்ள மாவட்டம் பற்றி உங்களுக்குத் தெரிந்தவை எவை?

## திருகோணமலை

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நகரம் அமைந்துள்ளது. இது இயற்கை எழில் நிறைந்தது. இங்கு மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இவர்களின் பிரதான தொழில்களாக விவசாயமும், மீன்பிடியும் காணப்படுகின்றன. இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் மையமாகவும் இந்நகரம் விளங்குகின்றது.

திருகோணமலையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது. அதனால், பிற நாடுகளிடையேயும் மிகவும் பிரசித்திபெற்று விளங்கு கின்றது. இந்தத்துறைமுகம் பண்டைக் காலம் முதல் பிரபலமானதொரு துறைமுகமாக விளங்குகின்றது.

போர்த்துக்கேயர் ஆட்சியின் நினைவாகப் பிரட்ரிக் கோட்டை இன்றும் நகர மத்தியில் காணப்படுகிறது. இந்தக் கோட்டைக்குள் இந்துக்களின் திருக்கோணஸ்வர ஆலயம் அமைந்துள்ளது. அங்கு செல்லும் வழியில் புள்ளி மான் கூட்டம் துள்ளித் துள்ளி விளையாடும். இது காண்போர் மனதை மயக்கும் இனிய காட்சி ஆகும்.

திருகோணமலை நகரத்தில் இருந்து 13 கிலோ மீற்றர் தூரத்தில் நிலாவெளி என்ற கிராமம் அமைந்துள்ளது. நிலாவெளிக் கடற்கரை மிகவும் அழகானது. உலகத்தில் உள்ள மிக அழகிய கடற்கரைகளுள் நிலாவெளிக் கடற்கரையும் ஒன்றாகும். அது நீலப் பச்சை நிறக் கம்பளம் விரித்தாற் போலக் காட்சி அளிக்கும். நிலாவெளி, சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த பிரதேசமாகும். இந்த இடம் சூரியக் குளியல், படகுப் பயணம் மற்றும் நீச்சல் ஆகியனவற்றுக்கு மிகச்சிறந்த இடமாகும்.

நிலாவெளிக் கடற்கரையில் இருந்து பார்க்கும்போது புறாமலை தெரியும். அது ஓர் அழகிய தீவு. உல்லாசப் பயணிகள் 2.5 கிலோ மீற்றர் கடலில் பயணம்செய்து புறாமலைக்குச் செல்வார்கள். அத்தோடு அங்கு உள்ள கடலில் சுழியோடி மகிழ்வார்கள்.

கன்னியாவில் ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. அவை மிகவும் புதுமை மிக்கவை. அவற்றில் உள்ள நீர் சூடாக இருக்கும். ஊற்றுக்கு ஊற்று வெப்ப நிலை மாறுபடும். இதில் நீராடுவதனால் பாவங்கள் நீங்கும் எனக் கூறுவர்.

இவ்வாறான பல்வேறுபட்ட இயற்கை அழகுமிக்க இடங்களைக் கொண்டமைந்த திருகோணமலையை நாமும் கண்டுகளிப்போம்.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| கிழக்கு | - නැගෙනහිර |
| அமைந்துள்ளது | - පිහිටා ඇත |
| இயற்கை | - ස්වාභාවික |
| எழில் | - ලස්සන |
| துறைமுகம் | - වරාය |
| பண்டைக்காலம் | - පුරාණක ාලය |
| கோட்டை | - කොටුව |
| புகழ் | - ප්‍රසිද්ධ |
| சுற்றுலாப் பயணிகளை | - සංචාරකයින් |
| நீச்சல் | - පිහිනීම |
| வெந்நீர் | - උණුවතුර |
| ஊற்று | - උල්පත |
| படகு | - ඔරුව |

## செயற்பாடு 1

**நண்பருடன் இணைந்து வினா எழுப்பி உரையாடுங்கள்.**

- இங்கு சென்றிருக்கிறீர்களா?

(+) சென்றிருக்கிறேன்.
(-) செல்லவில்லை.













## செயற்பாடு 2

**பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்து இணையுங்கள்.**



போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது. மான்கள் துள்ளி விளையாடும்.



மக்கள் வணங்குவதற்காகச் செல்வார்கள்.



அனைத்து நாடுகளில் இருந்தும் கப்பல்கள் இங்கு வந்து செல்லும்.



சிப்பிகள் சேகரிக்கலாம். குளித்து விளையாடலாம்.



குளித்து பாவங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.



படகில் செல்லலாம். புறாக்களையும் காணலாம்.

## செயற்பாடு 3

1. கட்டுரையில் உள்ள பெயரடைகளை இனங்காணுங்கள். பட்டியலப்படுத்துங்கள்.

2. பின்வரும் பெயர்ச் சொற்களை அடைமொழிகளாக்குங்கள்.

1. அழகு - அழகிய கடற்கரை
2. வேகம் -
3. குளிர் -
4. வெப்பம் -
5. பிரசித்தி -
6. வட்டம் -
7. அகலம் -
8. நீளம் -
9. பிரகாசம் -
10. மகிழ்ச்சி -

## செயற்பாடு 4

1 **பின்வரும் உரையாடலைச் செவிமடுங்கள், பாத்திரமேற்று வாசியுங்கள்.**



(கொழும்பில் இருந்து வந்த குடும்பத்தினர் புறமலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் படகோட்டியுடன் உரையாடுகின்றார்கள்.)

அப்பா : புறாமலைக்குப் போய் வர எவ்வளவு?

படகோட்டி : வயது வந்தோருக்கு 150 ரூபா, சிறுவருக்கு 100 ரூபா.

அப்பா : நாங்கள் நாலு பேரும் ஏறுகிறோம்.

படகோட்டி : எல்லோரும் பாதுகாப்புக் கவசம் அணியுங்கள். படகினுள் ஒவ்வொருவராக ஏறுங்கள். அவசரப்பட வேண்டாம். மெதுவாக ஏறுங்கள்.

மகன் : அப்பா! படகுப் பயணம் பயமா இருக்குமா?

அப்பா : இல்லை. இல்லை. பாதுகாப்புக் கவசம் இருப்பதால் பயமில்லை.

படகோட்டி : படகு புறப்படப் போகின்றது. எல்லோரும் படகின் இருபக்கமும் சமமாக இருங்கள்.

அம்மா : பாலா, ஷோபா, படகுப் பயணத்தின்போது கடல் நீரில் கையை விட்டு விளையாடக் கூடாது.

மகன்
மகள் : சரி அம்மா...

படகோட்டி : படகினுள் நடக்க வேண்டாம். விளையாட வேண்டாம். அனைவரும் உங்களுடைய பிள்ளைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

மகள் : அம்மா என் மனம் பயத்தில் பட பட வெனத் துடிக்கின்றது.

அம்மா : பயப்பட வேண்டாம்! ஷோபா.

மகன் : அம்மா கடலலை அடிப்பதைப் பாருங்கள்.

அப்பா : அதோ தெரிகிறது, புறா மலை.

அம்மா : மாலை நேரச் சூரியக் கதிர்களின் பளபளப்பில் கடல்நீர் மின்னுகின்றது.

படகோட்டி : புறாமலைக்கு வந்து விட்டோம். எல்லோரும் மெல்ல இறங்குங்கள்.

அப்பா : சரி பிள்ளைகள் கவனம். மெதுவாக இறங்குங்கள்.

மகன் : சரி, சரி, வாருங்கள் எல்லோரும். மள மள என்று மலையில் ஏறுவோம்.

## செயற்பாடு 5

**படகுப் பயணத்தின்போது, செய்யக் கூடியவற்றையும், செய்யக் கூடாதவற்றையும் அட்டவணைப்படுத்துங்கள்.**

| செய்யக் கூடியவை | செய்யக் கூடாதவை |
| --- | --- |
| 1.......................... | 1.......................... |
| 2.......................... | 2.......................... |
| 3.......................... | 3.......................... |

## செயற்பாடு 6

1

**ஆசிரியரின் உதவியுடன் உரையாடலைச் செவிமடுங்கள். சரி,பிழை இடுங்கள்.**

1. வயது வந்தவர்களுக்கான படகுக் கட்டணம் 100 ரூபா. ☐
2. சிறுவர்களுக்கான படகுக் கட்டணம் 75 ரூபா. ☐
3. படகில் பயணம் செய்யும்போது நடக்கலாம். ☐
4. படகுப் பயணத்தின்போது பாதுகாப்புக் கவசம் அணிய வேண்டும். ☐
5. படகில் கூட்டமாக ஏற வேண்டும். ☐

## செயற்பாடு 7

**பொருத்தமான சொற்றொடரை இணையுங்கள்.**

| | |
|---|---|
| 1. சல சல என | கடலில் மீன்கள் மின்னின. |
| 2. குபு குபு என | பயத்தால் இதயம் துடித்தது. |
| 3. மள மள என | சத்தம் கேட்டது. |
| 4. பட பட என | புறா மலையில் ஏறினோம். |
| 5. மட மட என | நீர் ஓடியது. |
| 6. சர சர என | புகை வந்தது. |
| 7. பள பள என | தண்ணீர் குடித்தேன். |
| 8. விறு விறு என | தங்கை நடந்து வந்தாள். |
| 9. குடு குடு என | புறாமலையில் இருந்து இறங்கினோம். |

## செயற்பாடு 8

**கீழ்வரும் பந்திகளை வாசியுங்கள். பந்தியின் பிரதான கருத்தை ஒரு வாக்கியத்தில் எழுதுங்கள்.**

1. நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றார்கள். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்போரே அவர்கள். அவர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைக் கடைப்பிடிக்கிறார்கள்.

2. இலங்கை இயற்கை வளம்மிக்கது. இதைக் காடுகள், மலைகள், நதிகள் என்பன அழகுபடுத்துகின்றன. பீதுருதாலகால மலை உயர்ந்த மலையாகும். மகாவலிகங்கை நீண்ட நதியாகும். நீர்வளம், நிலவளம், வன வளம் நிறைந்த எமது நாட்டைப் பார்க்கச் சுற்றுலாப் பயணிகள் பலர் வருகின்றனர்.

## செயற்பாடு 9

**கீழ்வரும் பந்தியைச் சிங்களமொழியில் மொழிபெயர்த்து எழுதுங்கள்.**

நிலாவெளிக் கடற்கரை உலகத்தில் உள்ள அழகிய கடற்கரைகளுள் ஒன்று. இது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. நட்சத்திரச் சுற்றுலா விடுதிகள் பல இங்கு காணப்படுகின்றன. எனவே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த பிரதேசமாக உள்ளது. சூரியக்குளியல், படகுப் பயணம் மற்றும் நீச்சல் ஆகியனவற்றுக்கு இது மிகச் சிறந்த இடமாகும்.

## செயற்பாடு 10

**குழுக்களாக இணையுங்கள். விருப்பமான இடத்திற்குச் சுற்றுலா செல்லத் திட்டமிடுங்கள்.**

- ❒ எப்போது ?
- ❒ எந்த இடங்களைப் பார்ப்பது ?
- ❒ யாருடன் செல்வது ?
- ❒ எங்கு தங்குவது ?

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| கண் | - | விழி | - | ඇස |
| பெண் | - | மாது | - | කාන්තාව |
| கள்வன் | - | திருடன் | - | සොරා |
| நிலா | - | சந்திரன் | - | හඳ |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| நம்பிக்கை | - அவநம்பிக்கை | - විශ්වාසය | - අවිශ්වාසය |
| வேகமாக | - மெதுவாக | - වේගයෙන් | - සෙමින් |
| சரி | - பிழை | - නිවැරදි | - වැරදි |
| ஞாபகம் | - மறதி | - මතක | - අමතක |
| சுகம் | - சுகமின்மை | - සැප | - දුක |

# 2 ஓய்வு நேரத்தில்

**குழுக்களாக இணையுங்கள். பொழுதுபோக்குகளைப் பற்றிக் கலந்து ரையாடுங்கள். எழுதுங்கள். முன்வையுங்கள். ஏனைய குழுக்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.**



## செயற்பாடு 1

2

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுத்துப் பொருத்தமான இலக்கத்தைப் பெட்டிக்குள் இடுங்கள்.**











1. பாடல்களைக் கேட்டல்
2. சைக்கிள் ஓடுதல்.
3. புத்தகம் வாசித்தல்.
4. பாட்டுப் பாடுதல்.
5. உடற்பயிற்சி செய்தல்.
6. தொலைக்காட்சி பார்த்தல்.
7. தடாகத்தில் நீந்துதல்.
8. கிரிக்கட் விளையாடுதல்.
9. செஸ் விளையாடுதல்.

## செயற்பாடு 2

**பின்வரும் பொழுதுபோக்குகளை வாசித்து அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.**



### நான் நந்தினி

சிறுவயது முதல் நீந்துவதை எனது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளேன். நான் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நீந்துவேன். இதற்காக விசாகாக் கல்லூரி நீச்சல் தடாகத்திற்குச் சென்று வருவேன். இதனால் நல்ல தேகஆரோக்கியமும், மனமகிழ்ச்சியும் உண்டாகிறது.



### நான் சண்முகம்

நான் எனது தாத்தாவோடு இணைந்து வீட்டில் சிறு தோட்டம் செய்கிறேன். எனக்கு மரம் வளர்ப்பதில் ஆர்வம். இது எமது இயற்கைச் சூழலை பாதுகாக்கிறது. ஞாயிற்றுக்கிழமை எமது வீட்டுத் தோட்டத்தில் மரங்களை நடுவேன். பழமரங்கள் எமக்குத் தேவையான பழங்களைத் தருகின்றன.



### நான் சத்தியா

எனது பெயர் சத்தியா. பள்ளிப் பருவத்திலிருந்து பொழுதுபோக்காகக் கிரிக்கட் விளையாடுகிறேன். திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாலை வேளைகளில் பாடசாலை மைதானத்தில் விளையாடுவேன். எமது பாடசாலை கிரிக்கட் அணி இம்முறை பாடசாலைகளுக்கிடையிலான வெற்றிக் கேடயத்தைப் பெற்றது. விளையாடுவதால் உடலுக்கு உறுதி கிடைக்கின்றது.

### நான் கலா



எனது பெயர் கலா. நானும் அக்காவும் வார இறுதி நாட்களில் மாலையில் தொலைக்காட்சி பார்ப்போம். நாங்கள் ''குட்டிச்சுட்டி'' போன்ற சிறுவர் நிகழ்ச்சிகளை வசந்தம் தொலைகாட்சியில் பார்ப்போம். இது எமக்கு மிகவும் பிடித்த நிகழ்ச்சி. சில வேளைகளில் எமது அம்மாவும் சேர்ந்து பார்ப்பார். தொலைக்காட்சி பார்ப்பதால் உலக நடப்புகளைத் தெரிந்து கொள்ளலாம்.

| யார்? | என்ன செய்ய விருப்பம்? | எப்பொழுது? | எங்கே? | ஏன்? |
|---|---|---|---|---|
| 1. நந்தினி | | | | |
| 2. சண்முகம் | | | | |
| 3. சத்தியா | | | | |
| 4. கலா | | | | |

### சொல் அறிமுகம்

கல்லூரி - විද්‍යාලය

ஆர்வம் - උනන්දුව

சூழல் - පරිසරය

அணி - කණ්ඩායම

வார இறுதி - සති අන්තය

கேடயத்தை - කුසලානය

நிகழ்ச்சி - වැඩසටහන

## செயற்பாடு 3

**குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள். கீழே உள்ள பொழுதுபோக்குகளை வாசியுங்கள். உங்கள் வகுப்பில் ஆண்கள் விரும்பும் பொழுதுபோக்குகள், பெண்கள் விரும்பும் பொழுதுபோக்குகள், ஆண், பெண் இருபாலாரும் விரும்பும் பொழுதுபோக்குகள் என அட்டவணைப்படுத்துங்கள்.**

வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கரம் விளையாட்டு, நீந்துதல், முத்திரை சேகரித்தல், கவிதை எழுதுதல், புகைப்படம் பிடித்தல், புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல், நடனம் ஆடுதல், தொலைகாட்சி பார்த்தல், இசை கேட்டல், றகர், பூந்தோட்டம் அமைத்தல், அலங்காரப் பொருட்கள் செய்தல், சித்திரம் வரைதல்.



______________________
______________________
______________________
______________________
______________________
______________________



______________________
______________________
______________________
______________________
______________________
______________________



______________________
______________________
______________________
______________________
______________________
______________________

## செயற்பாடு 4

**சோடிகளாக இணைந்து விருப்பமான பொழுதுபோக்குகளையும், விருப்பம் இல்லாத பொழுதுபோக்குகளையும் கூறுங்கள்.**

உதாரணம் ▪ எனக்கு கிரிக்கட் விளையாட விருப்பம்.

• கரம் விருப்பம் இல்லை.

▪

•

## செயற்பாடு 5

**உதாரணத்தை அவதானியுங்கள். ஒவ்வொன்றுக்கும் ''அல்லது'' என்ற சொல்லைப் பயன்படுத்தி வாக்கியம் எழுதுங்கள்.**

உ+ம் அப்பா பணம் தருவார்.
அம்மா பணம் தருவார்.

அப்பா அல்லது அம்மா பணம் தருவார்.

1. நான் தொலைக்காட்சி பார்ப்பேன்.
   நான் திரைப்படம் பார்ப்பேன்.

2. நாங்கள் கிரிக்கட் விளையாடுவோம்.
   நாங்கள் கரப்பந்து விளையாடுவோம்.

3. நான் பால் குடிப்பேன்.
   நான் தேநீர் குடிப்பேன்.

4. அண்ணா நாளைக்கு வருவார்.
   அண்ணா நாளை மறுநாள் வருவார்.

## செயற்பாடு 6

**நண்பனின் குறுஞ்செய்திக்குப் (SMS) பதில் எழுதுங்கள்.**






## செயற்பாடு 7

**பின்வரும் விளையாட்டு வீரர்களின் தகவல்களைக் கொண்டு அவர்களைப் பற்றிச் சிறு பந்தி எழுதுங்கள்.**




- குமார் சங்கக்கார
- பிறப்பு : 27.10.1977
- ஊர் : மாத்தளை
- பாடசாலை : திருத்துவக் கல்லூரி, கண்டி
- இடது கை துடுப்பாட்ட வீரர்
- விக்கெற் காப்பாளர்.
- முதற் போட்டி ஜூலை 20 தென்னாபிரிக்கா
- ஒரு நாள் சர்வதேசப் போட்டி 333
- ஓட்டங்கள் 10842
- அதிகபட்சம்138(ஆட்டமிழக்காது)
- சராசரி 38.72
- சதங்கள் - 14
- அரைச்சதங்கள் - 73




- சுசந்திக்கா ஜயசிங்க
- பிறப்பு : 17.12.1975
- ஊர் : வறக்காப்பொல
- 100m , 200m ஓட்டங்களில் பல சாதனைகள்.
- 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம்.
- 1948 பின் ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஒரே இலங்கையர்.
- 15வது ஆசிய விளையாட்டு போட்டியில் 100m வெள்ளிப் பதக்கம், 200m வெண்கலப்பதக்கம்.
- உலகத் தடகளப் போட்டி 2007 ஜப்பானில் 200m வெண்கலப் பதக்கம்.
- தனிப்பட்ட சாதனை 100m - 11.04

## செயற்பாடு 8

உங்களுக்கு விருப்பமான பொழுதுபோக்குப் பற்றி 150 சொற்களில் கட்டுரை வரைக.

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அம்மா | - தாய் | - අම්මා |
| சொல் | - பதம் | - වචනය |
| தோழன் | - நண்பன் | - මිතුරා |
| வையகம் | - உலகம் | - ලෝකය |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| நல்லவன் | - கெட்டவன் | - හොඳ පුද්ගලයා | - නරක පුද්ගලයා |
| நீதி | - அநீதி | - යුක්තිය | - අයුක්තිය |
| முன்னால் | - பின்னால் | - ඉදිරියෙන් | - පසුපසින් |
| இரகசியம் | - பரகசியம் | - රහස | - නොරහස |
| ஒற்றுமை | - வேற்றுமை | - සමගිය | - අසමගිය |

# 3 எமது தாய் நாடு

**எமது நாடு பற்றிய தகவல்களை வாசியுங்கள்.**



மொத்தப் பரப்பளவு
65610 ச.கிமீ

மதங்கள்
பௌத்தம் (70.1%), இந்து (12.58%),
இஸ்லாம் (9.6%), கிறிஸ்தவம் (7.62%)

தேசிய மரம் நாகமரம்

வாழும் இனங்கள்
சிங்களவர்கள் (74%) , தமிழர்கள்
(15.4%), முஸ்லிம்கள் (10%),
பறங்கியர் (1%)

மாவட்டங்கள் 25

சுதந்திரம் அடைந்த நாள்
1948.02.04

சனத்தொகை
20, 227, 597

தேசியப் பூ நீலோற்பலம்

அரசகரும மொழிகள்
சிங்களம், தமிழ்

மாகாணங்கள் 09

தேசியப் பறவை
காட்டுக்கோழி

தலைநகரம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கொழும்பு

தேசிய விளையாட்டு
கைப்பந்தாட்டம்

## செயற்பாடு 1

**வினாக்களுக்கு விடை கூறுங்கள்.**

1. இலங்கையின் தலைநகரம் எது?
2. இலங்கையின் தேசிய மரம் யாது?
3. இலங்கை எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது?
4. இலங்கையில் பேசப்படும் பிரதான மொழிகள் எவை?
5. இலங்கையில் உள்ள மாகாணங்கள் எத்தனை?
6. இலங்கையின் தேசிய மலர் எது?
7. இலங்கையின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?
8. இலங்கையில் பிரசித்தி பெற்ற இடங்கள் மூன்றினைக் கூறுங்கள்.

**பின்வரும் கட்டுரையை வாசிப்போம்.**

எமது தாய் நாடு இலங்கை. இது இந்து சமுத்திரத்தில் உள்ள ஓர் அழகான தீவு. இதனால் எமது நாட்டை இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கிறார்கள்.

எமது நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றார்கள். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்போரே அவர்களாவர். இவர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைக் கடைப்பிடிக்கிறார்கள்.









இலங்கை நாடு இயற்கைவளம் மிக்கது. இதைக் காடுகள், மலைகள், நதிகள் என்பன அழகுபடுத்துகின்றன. இங்கு பீதுருதாலகாலமலை உயர்ந்த மலையாகும். மகாவலிகங்கை நீண்ட நதியாகும். நீர் வளம், நிலவளம், வன வளம் நிறைந்த எமது நாட்டைப் பார்க்கச் சுற்றுலாப் பயணிகள் பலர் வருகின்றனர்.

எமது நாட்டின் பிரதான தொழில்களில் ஒன்று விவசாயமாகும். அந்நிய நாட்டவரின் வருகையால் தேயிலை, இறப்பர், கோப்பி போன்றவையும் பயிரிடப்படுகின்றன. இவற்றுள் எமது நாட்டிற்குப் பெருமளவு தேசிய வருமானத்தை ஈட்டித் தருவது தேயிலை ஆகும். அது மட்டுமின்றி ஏலம், மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய், முதலிய வாசனைத் திரவியங்களும் பயிரிடப்படுகின்றன. இவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலங்கை மக்களின் பிரதான உணவு சோறாகும்.







இலங்கையில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் உள்ளன. சீகிரியா, தலதாமாளிகை, சிவனொளிபாத மலை, நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் அவற்றுள் சிலவாகும்.

எமது நாட்டின் தேசிய மரம் நாக மரம், தேசிய மிருகம் மரஅணில், தேசியப் பறவை காட்டுக் கோழி, தேசிய மலர் நீலோற்பலம். எமது தேசிய கீதத்தை திரு.ஆனந்த சமரக்கோன் இயற்றினார். இதனை தமிழில் மு.நல்லதம்பிப் புலவர் மொழிபெயர்த்தார்.

இலங்கை இரத்தினக் கற்களுக்கும் புகழ்பெற்றது. அதனால் இரத்தினதுவீபம் என்றும் பெயர் பெறுகிறது. இலங்கையின் இரத்தினபுரி மாவட்டம் இரத்தினக் கற்களுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற மாவட்டமாகும்.

இவ்வாறு இயற்கை வளங்கள் நிறைந்த எமது நாட்டில் பல்லின மக்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். எமது நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

## சொல் அறிமுகம்

தீவு - ද්වීපය

இந்து சமுத்திரத்தில் - ඉන්දියන් සාගරයේ

பல்லின மக்கள் - විවිධ ජාතීන්

வளம் - සම්පත්

பெருமளவு - වැඩි ප්‍රමාණයක්

தேசிய வருமானம் - ජාතික ආදායම

வாசனைத் திரவியங்கள் - කුළු බඩු

பயிரிடப்படுகின்றன - වගා කරයි

ஏற்றுமதி - අපනයනය

வரலாறு - ඉතිහාසය

தேசிய மரம் - ජාතික වෘක්ෂය

ஒற்றுமையுடன் - සමගියෙන්

## செயற்பாடு 2

**படங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து இணையுங்கள்.**

| | |
|---|---|
|  | நல்லூர்க் கந்தசுவாமி கோவில் |
|  | இரத்தினக்கற்கள் |
|  | நாக மரம் |
|  | சாதிக்காய் |
|  | தேயிலை |
|  | கறுவா |
|  | கராம்பு |
|  | காட்டுக்கோழி |
|  | இறப்பர் |
|  | மிளகு |
|  | ஏலம் |
|  | மர அணில் |

## செயற்பாடு 3

3

**பின்வருவனவற்றை ஆசிரியரின் உதவியுடன் செவிமடுங்கள். படத்திற்குப் பொருத்தமாக இலக்கத்தினை இடுங்கள்.**

1. இரத்தினக்கற்களுக்குப் புகழ் பெற்ற இடம், சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள மாவட்டம்.

2. யாழ்ப்பாணத்தில் உள்ளது. இந்துக்களின் பிரசித்தி பெற்ற ஆலயம்.

3. கண்டியில் உள்ளது. புத்தரின் புனித தந்தம் வைக்கப்பட்டுள்ளது.

4. காசியப்பனால் கட்டப்பட்டது. சித்திரங்கள் பிரசித்தி பெற்றவை.

5. திருகோணமலையில் உள்ளது. பிரசித்தி பெற்ற கடற்கரைப் பிரதேசம்.

6. நான்கு மதத்தவரும் வழிபாடு செய்யும் இடம். இது ஒரு மலை.

☐ 

☐ 

☐ 

☐ 

☐ 

☐ 

## செயற்பாடு 4

**சரி (✓) பிழை (x) இடுக.**

1. இலங்கையில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள். ☐

2. இலங்கை இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு தீவு ஆகும். ☐

3. எமது நாட்டில் உயர்ந்த மலை சிவனொளிபாத மலையாகும். ☐

4. எமது நாட்டிற்குப் பெருமளவு தேசிய வருமானத்தை ஈட்டித்தருவது கோப்பி ஆகும். ☐

5. இலங்கையின் நீண்ட நதி மகாவலி கங்கையாகும். ☐

## செயற்பாடு 5

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. எமது தாய் நாடு எது?

2. எமது நாட்டில் வாழும் இனங்கள் எவை?

3. எமது நாட்டில் பின்பற்றப்படும் சமயங்கள் எவை?

4. எமது நாட்டில் உயர்ந்த மலை எது?

5. எமது நாட்டில் பயிரிடப்படும் பயிர்கள் எவை?

6. இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் ஐந்தினை எழுதுங்கள்.

7. இலங்கை 'இரத்தினதுவீபம்' எனப் பெயர் பெறக் காரணம் யாது?

## செயற்பாடு 6

**பின்வரும் சொற்களுக்கு எதிரான கருத்துடைய சொற்களைப் பாடத்திலிருந்து தெரிந்து எழுதுங்கள்.**

1. செயற்கை - ______________
2. பலர் - ______________
3. வேற்றுமை - ______________
4. தாழ்ந்த - ______________
5. உள்நாடு - ______________
6. இறக்குமதி - ______________

## செயற்பாடு 7

**பின்வரும் வாக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

1. අපේ රටේ විවිධ ජාතිවලට අයත් ජනතාව ජීවත් වෙති.
2. අපේ රට ඉන්දියන් සාගරයේ ලස්සන දූපතකි.
3. ලංකාව මැණික්වලට ප්‍රසිද්ධයි.
4. අපේ රටේ විවිධ ජාතිවලට අයත් ජනතාව සමගියෙන් ජීවත් වෙති.
5. අපේ රට කෘෂිකාර්මික රටකි.
6. අපේ මව්බිම ලංකාවයි.
7. අපේ රටේ ජාතික පුෂ්පය නිල් මානෙල් වේ.
8. ලංකාවේ ප්‍රසිද්ධ ස්ථාන බොහෝ ඇත.
9. අපේ රටේ සංවර්ධනය සඳහා අප කැපවීමක් කළ යුතු ය.
10. අපි සියලු දෙනා සමගියෙන් ජීවත් වෙමු.

## செயற்பாடு 8

**ஆசிரியர் உதவியுடன் தேசிய கீதத்தை செவிமடுங்கள். சிங்களமொழியில் உள்ள தேசிய கீதத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.**

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

மொழிபெயர்ப்பு

மு.நல்லதம்பிப் புலவர்

## செயற்பாடு 9

**பின்வரும் சொற்களுக்குச் சமமான கருத்தைத் தரும் சொற்களை தேசிய கீதத்தில் இருந்து தெரிந்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| அம்மா | - ______________ | பிரசித்தி | - ______________ |
| அழகு | - ______________ | கங்கை | - ______________ |
| பூ | - ______________ | வெளிச்சம் | - ______________ |

## செயற்பாடு 10

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள். வாசியுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| நான் | (வாழ் + கின்ற் + ஏன்) | = | வாழ்கின்றேன். |
| நாங்கள் | (வாழ் + கின்ற் + ஓம்) | = | வாழ்கின்றோம். |
| நீ | (வாழ் + கின்ற் + ஆய்) | = | வாழ்கின்றாய். |
| நீங்கள் | (வாழ் + கின்ற் + ஈர்கள்) | = | வாழ்கின்றீர்கள். |
| அவன் | (வாழ் + கின்ற் + ஆன்) | = | வாழ்கின்றான். |
| அவள் | (வாழ் + கின்ற் + ஆள்) | = | வாழ்கின்றாள். |
| அவர் | (வாழ் + கின்ற் + ஆர்) | = | வாழ்கின்றார். |
| அவர்கள் | (வாழ் + கின்ற் + ஆர்கள்) | = | வாழ்கின்றார்கள் |
| அது | (வாழ் + கின்ற் + அது) | = | வாழ்கின்றது. |
| அவை | (வாழ் + கின்ற் + அன) | = | வாழ்கின்றன. |

## செயற்பாடு 11

**உதாரணங்களை அவதானியுங்கள். இடைவெளியை நிரப்புங்கள்.**

| | | |
|---|---|---|
| **நான்** | **வருகின்றேன்.** | **இருக்கின்றேன்.** |
| நாங்கள் | ______ | ______ |
| நீ | ______ | ______ |
| நீங்கள் | ______ | ______ |
| அவன் | ______ | ______ |
| அவள் | ______ | ______ |
| அவர் | ______ | ______ |
| அவர்கள் | ______ | ______ |
| அது | ______ | ______ |
| அவை | ______ | ______ |

## செயற்பாடு 12

**(அ) பின்வரும் தகவல்களைக் கொண்டு பந்தியொன்றினை உருவாக்குங்கள்.**





- ❖ தலை நகரம் - புதுடில்லி.
- ❖ பிரதமர் - நரேந்திரமோடி.
- ❖ பரப்பளவு - 1,269,219 சதுர மைல்.
- ❖ மக்கள் தொகை - 1, 210,193,122.
- ❖ நாணயம் - இந்திய ரூபாய்.
- ❖ உலக சனத்தொகையில் இரண்டாம் இடம்.
- ❖ பண்டைய நாகரிகங்களுள் ஒன்று. இங்கு இந்து,பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், சமணம், சீக்கியம் ஆகிய நான்கு மதங்களும் முக்கியமானவை.
- ❖ மொகலாயக் கட்டிடக்கலைக்குச் சான்று தாஜ்மஹால்.

**(ஆ) பின்வரும் தகவல்களைக் கொண்டு பந்தியொன்றினை உருவாக்குங்கள்.**





- தலை நகரம் - டோக்கியோ.
- பிரதமர் - டாரே ஆசோ.
- பரப்பளவு - 145,883 சதுர மைல்.
- மக்கள் தொகை - 128, 085,000.
- நாணயம் - யென்.
- மொத்தத் தீவுகள் - 6858.
- உலக சனத்தொகையில் பத்தாவது இடம்.
- உலக பொருளாதார சக்திமிக்க நாடுகளில் இரண்டாவது இடம்.
- அதிகபட்ச வாழ்நாள் சராசரியைக் கொண்ட நாடு.
- சுனாமி, நிலநடுக்கங்கள் அதிகமாக இடம்பெறும்.
- பாரம்பரிய விளையாட்டு சுமோ.

## செயற்பாடு 13

**பின்வரும் தகவல்களைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**(அ) நான் கண்டு இரசித்த ஒரு பூங்கா**

**முகவுரை**

- ❖ பூங்காவின் பெயர்/பூங்காவுக்குச் சென்ற காரணம்/சென்ற தினம்/பூங்கா பற்றிய பொதுவான விளக்கம்.

**கண்ட காட்சிகள்**

- ❖ பெருமரங்கள், செடிகள். பூமரங்கள், தடாகங்கள், நீரூற்றுக்கள், புற்றரை என்பன பற்றிய வர்ணனைகள்.
- ❖ பூங்கா பராமரிக்கப்பட்டிருக்கும் தன்மை.
- ❖ பொழுதுபோக்கு அம்சங்கள்.
- ❖ பெரியவர்களுக்கானவை/சிறுவர்களுக்கானவை.
- ❖ மக்கள் பூங்காவில் நடந்து கொண்ட முறை.
- ❖ மனதில் இடம் பிடித்த காட்சிகள்.

**முடிவுரை**

**(ஆ) தாய்மொழி அல்லாத இன்னொரு மொழியைக் கற்பதிலுள்ள நன்மைகள்**

- ❖ முகவுரை (தாய்மொழி பற்றி விளக்கம்)
- ❖ இன்னொரு மொழி (தமிழ், ஆங்கிலம், ஜெர்மன், ஜப்பான்)

**நன்மைகள்**

- இனங்களுக்கு இடையிலான ஒற்றுமைகளை வளர்த்தல்.
- மொழிமூலம் அம்மொழி இலக்கியங்களை அறிதல்.
- மக்களின் கலாசாரம் மற்றும் பண்பாடு பற்றி அறிதல்.
- தொடர்பாடல்களுக்கு உதவுதல்.
- ஆளுமை விருத்தி.

**முடிவுரை**

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒளி | - | வெளிச்சம் | - | ආලෝකය |
| மகிழ்ச்சி | - | சந்தோஷம் | - | සතුට |
| கதிரவன் | - | சூரியன் | - | ඉර |
| வெப்பம் | - | சூடு | - | උෂ්ණ |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| காலை | - மாலை | - උදය | - සවස |
| மேல் | - கீழ் | - උඩ | - යට |
| ஒளி | - இருள் | - ආලෝකය | - අඳුර |
| புதுமை | - பழமை | - අලුත් | - පරණ |
| வெப்பம் | - குளிர் | - උෂ්ණ | - සීතල |

# 4 இலங்கையில் தமிழ் ஊடகங்கள்

**பின்வரும் படங்களை அவதானியுங்கள். கலந்துரையாடுங்கள்.**

இன்று மக்களிடையே ஊடகங்கள் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. ஊடகங்கள் ஊடாக மக்களிடையே தொடர்பாடல்கள் நடைபெறுகின்றன. இவ்வூடகங்களை இலத்திரனியல் ஊடகம், அச்சு ஊடகம் என வகைப்படுத்தலாம். இலத்திரனியல் ஊடகத்தில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பன அடங்குகின்றன. அச்சு ஊடகத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன அடங்குகின்றன.

பெரும்பாலான ஊடகங்கள் ஒரு குறிப்பிட்ட பரப்பிற்குள் உள்ள வாசகர்களைப் பற்றி அக்கறை காட்டுகின்றன. இணையம் உலக மக்களை இணைக்கும் ஒரு முக்கிய ஊடகமாக இருக்கின்றது. சமூகத்திற்கு மிகவும் முக்கிய தூணாக விளங்குவது இவ்வூடகம் ஆகும். ஊடகங்கள் புதிய கருத்துக்களையும் உருவாக்குகின்றன.

அந்த வகையில் எமது நாட்டில் பல்வேறு வகையான தமிழ் ஊடகங்கள் காணப்படுகின்றன. அவற்றை அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் என வெவ்வேறாக நோக்குவோம்.

எமது நாட்டு அச்சு ஊடகங்களில் பத்திரிகைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. அந்த வகையில் கொழும்பிலிருந்து

- தினகரன்
- வீரகேசரி
- தினக்குரல்
- சுடரொளி
- தமிழ் மிரர் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளும்

யாழ்ப்பாணத்திலிருந்து

- உதயன்
- வலம்புரி
- யாழ் தினக்குரல்
- தினமுரசு ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளும் வெளிவருகின்றன.

இலத்திரனியல் ஊடகங்களை தொலைக்காட்சி, வானொலி என வகைப்படுத்திக் கூறலாம். தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகள் பல உள்ளன. அவற்றுள் வசந்தம், நேத்திரா, வர்ணம், சக்தி என்பன சிலவாகும். வானொலி அலைவரிசைகளுள் தென்றல், சூரியன் எப்எம், சக்தி எப்எம் போன்றன சிலவாகும்.

இவ்வூடகங்கள் உலகில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளை உடனுக்குடன் வாசகர்களுக்கு தருகின்றன. அது மட்டுமன்றி சினிமா, இலக்கியம், எனப் பல்வேறு அம்சங்களைத் தந்து வாசகரின் மனங்களை வென்றெடுக்கின்றன.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| ஊடகங்கள் | - මාධ්‍ය |
| ஊடாக | - මගින් |
| தொடர்பாடல்கள் | - සන්නිවේදන |
| வாசகர்கள் | - පාඨකයෝ |
| இணையம் | - අන්තර්ජාලය |
| முக்கிய | - වැදගත් |
| அச்சு ஊடகங்கள் | - මුද්‍රිත මාධ්‍ය |
| சமூகத்திற்கு | - සමාජයට |
| பல்வேறு | - විවිධ |
| வானொலி | - ගුවන්විදුලිය |

## செயற்பாடு 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. ஊடகங்களின் வகைகளைக் கூறுங்கள்.
2. இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டைக் கூறுங்கள்.
3. அச்சு ஊடகங்கள் இரண்டைக் கூறுங்கள்.
4. உலக மக்களை ஒன்றிணைக்கும் ஊடகம் எது?
5. கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் எவை?
6. தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகள் இரண்டினைக் கூறுக.

## செயற்பாடு 2

**பத்திரிகைச் செய்தியை வாசியுங்கள். கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**



தினகரன்

www.thinakaran.lk THINAKARAN

### இலங்கைப் பிரதமரின் இந்திய விஜயம்

இலங்கைப் பிரதமர் இம் மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். கடந்த ஜனவரி மாதம் பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் மேற்கோள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தில் பிரதமர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் எதிர்க் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரை ராஜ் பவனில் சந்திக்கவுள்ளார். இந்த விஜயம் இலங்கை, இந்திய நட்புறவை மேம்படுத்தும் விஜயமாக அமையும்.

1. செய்தியின் தலைப்பு என்ன? ..................................................

2. சந்திப்பு எங்கே இடம் பெறுகின்றது? ..........................................

3. செய்தியில் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்? ...................................

4. நோக்கம் என்ன? ................................................................

## செயற்பாடு 3

**கீழ் காட்டப்பட்ட செய்திகளுக்குப் பொருத்தமான தலைப்புகளின் இலக்கங்களைக் கட்டங்களில் இடுங்கள்.**

1 கவுண்டி போட்டியில் சங்கக்கார சதம்

2 பெறுகை அறிவித்தல்
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தனியார் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல்.

குமார் சங்கக்கார இங்கிலாந்தில் கவுண்டி போட்டியில் விளையாடி வருகிறார். சர்ரே அணிக்காக விளையாடி வரும் அவர், முதற் தரப் போட்டியில் 53-வது சதத்தை அடித்தார்.



இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் வகையில் இந்திய மத்திய அரசு ஆரம்பிக்கவுள்ளது.



4 பொது மக்களுக்கான அறிவித்தல்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால் பெலவத்தை, பத்தரமுல்ல இலங்கைப் பரீட்சைகள் திணைக்கள வளாகத்திற்கான பாதுகாப்புச் சேவையை 2015/ 2016 ஒரு வருட காலத்திற்கு வழங்கும் பொருட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஜூன் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12% சதவீதத்தால் அதிகரித்துள்ளது.



5 சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 12 சதவீத அதகரிப்பு

2007ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைப்புத் தொடர்பான லிக்ரமட்ரஸ்ட் இன்வெஸ்ட் மென்ட் (பீவீ) எல்ரிடீ இத்தால் பொது மக்களுக்கு அறிவித்தலை வழங்குகின்றது.

3 2 ஆயிரம் கோடி ரூபா செலவில் இந்தியா-இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கத் திட்டம்.

## செயற்பாடு 4

4 **பின்வரும் செய்தி மாதிரியைச் செவிமடுங்கள். கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவை

நேரம் மாலை 6.00 மணி

செய்திகளை வாசிப்பவர் சுமன் தங்கையா

தலைப்புச் செய்திகள்

பண்டாரவளைக் கலைமகள் வித்தியாலயம் புலமைப் பரிசிற் பரீட்சையில் முதலிடம்.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு.

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் இலங்கைக்கு அமோக வெற்றி.

1. செய்தி வாசிக்கப்படும் நேரம் என்ன?

_______________________________

2. செய்தி ஒளிபரப்பப்படும் சேவை என்ன?

_______________________________

3. செய்தி வாசிப்பவர் யார்?

_______________________________

4. வாசிக்கப்படும் செய்திகள் எவை?

_______________________________

_______________________________

_______________________________

## செயற்பாடு 5

வானொலிச் செய்தி ஒன்றினை செவிமடுத்து எழுதுங்கள். வாசியுங்கள்.

## செயற்பாடு 6

**பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 'ஊடகம்' என்ற தலைப்பில் 150 சொற்கள் கொண்ட கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.**

- மனித பயன்பாட்டில் ஊடகத்தின் பங்கு
- தற்போது அதிகமாகப் பயன்படும் ஊடக வகைகள்
- தற்போது காணப்படும் ஊடக வகைகள்
- பத்திரிகை
- அனுகூலங்கள்
- இணையம்
- வானொலி
- பிரதிகூலங்கள்
- தொலைக்காட்சி

## செயற்பாடு 7

**பின்வரும் விளம்பரத்தை வாசியுங்கள். விடை எழுதுங்கள்.**




1. பற்பசையின் பெயர் என்ன?
2. யாருடைய ஆலோசனைப்படி பற்பசை தயாரிக்கப்பட்டது?
3. பற்பசையின் விலை என்ன?

## செயற்பாடு 8

**பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான விளம்பரங்களை எழுதுங்கள்.**






## செயற்பாடு 9

**கீழ்வரும் உரையாடலை வாசியுங்கள். தடித்த எழுத்துக்களால் ஆன தொடர்களை அவதானித்தீர்களா?**




அண்ணா! நீங்கள் ஒருபோதும் எனக்கு **காதுகுத்த** முடியாது. உங்கள் காணியில் நான் ஒரு **கண்வைத்திருக்கிறேன்.** நானும் உங்களிடம் பல தடவை கேட்டு விட்டேன். நீங்களோ பாலனின் கதைக்குச் **செவி சாய்த்திருக்கிற** மாதிரித் தெரியுது...




யாரோ **கதைகட்டி** விட்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்டதை நான் ஒரு நாளும் **தட்டிக்கழிக்க** மாட்டன். நான் துன்பப்பட்ட காலத்தில் என்னுடன் கூடவே இருந்து **தோளுக்குத்தோள் கொடுத்த** உங்களை நான் என்றுமே மறக்க மாட்டன். உங்களுக்கே கொடுக்கச் சொல்லி என் மகன் **ஒற்றைக்காலில் நிற்கிறான்.** நான் எப்படியும் உங்களுக்குத்தான் தருவேன்.

அதனைக் கேட்ட கேஷவ் **உச்சிகுளிர்ந்து** போனான்.

## மரபுத்தொடர்

சொற்களுக்கு உரிய நேர்ப்பொருளை உணர்த்தாது, அச் சொற்களின் ஆற்றலால் ஒரு குறித்த பொருளில் வழங்கி வரும் தொடர் **மரபுத்தொடர்** எனப்படும்.

உதாரணம் -

| | | |
|---|---|---|
| அடியொற்றுதல் | - | பின்பற்றுதல் |
| கண் கனலுதல் | - | கோபித்தல் |
| கண் திறத்தல் | - | அறிவு உண்டாதல் |
| கண் படுதல் | - | நித்திரை செய்தல் |
| கண் மலர்தல் | - | விழித்தல் |
| கழுத்தறுத்தல் | - | தீமை செய்தல் |
| கை நீட்டல் | - | அடித்தல், கொடுத்தல் |
| கை தளர்தல் | - | வறுமை அடைதல் |
| தலைதடுமாறல் | - | கலக்கமடைதல் |
| வாலாட்டுதல் | - | சேட்டை பண்ணுதல் |

## செயற்பாடு 10

**உரையாடலில் காணப்பட்ட மரபுத் தொடர்கள் கீழே தரப்பட்டுள்ளன. சரியான விளக்கங்களை அறிந்து தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| காதுகுத்தல் | தவிர்த்தல் |
| கண் வைத்தல் | பொய்ச்செய்தி கூறல் |
| செவிசாய்த்தல் | ஏமாற்றுதல் |
| கதைகட்டுதல் | பிடிவாதமாக இருத்தல் |
| தட்டிக்கழித்தல் | ஆசைவைத்தல் |
| தோள் கொடுத்தல் | ஏற்றுக்கொள்ளல் |
| ஒற்றைக்காலில் நிற்றல் | உதவிபுரிதல் |
| உச்சி குளிர்தல் | மகிழ்ச்சிஅடைதல் |

## செயற்பாடு 11

**மேலும் சில மரபுத்தொடர்களை அறிவோம். சரியான விளக்கங்களை அறிந்து தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| காதுகொடுத்தல் | முழுமையாகக் கற்றல் |
| கழுத்தறுத்தல் | திருடுதல் |
| வயிற்றில் அடித்தல் | ஏற்றுக்கொள்ளல் |
| தலை கவிழ்தல் | உதவுதல் |
| கரைத்துக்குடித்தல் | விருப்பம் இன்றிச் செயற்படல் |
| கைகொடுத்தல் | வெட்கம் அடைதல் |
| கூலிக்கு மாரடித்தல் | சண்டை பிடித்தல் |
| கையாடுதல் | பிறரை மகிழ்விக்க ஏற்றவாறு தாம் நடத்தல் |
| கைகலத்தல் | பிழைப்பைக் கெடுத்தல் |
| தாளம் போடுதல் | ஏமாற்றுதல் |

## செயற்பாடு 12

**சோடிகளாகுங்கள். A மாணவன் வினவ, B மாணவன் விளக்கம் கூறுவார். அவ்வாறே B மாணவன் வினவ, A மாணவன் விளக்கம் கூறுவார்.**

| A | | B |
|---|---|---|
| புண்படுதல் | - | மனம் நோகப் பேசுதல் |
| வாய் மலர்தல் | - | பேசுதல் |
| முதலைக் கண்ணீர் | - | பொய் இரக்கம் |
| வாரி இறைத்தல் | - | அளவின்றிச் செலவு செய்தல் |
| துண்டு விழுதல் | - | நட்டமாதல் |

| B | | A |
|---|---|---|
| அரைமனிதன் | - | மதிப்பில்லாதவன் |
| உதவாக்கரை | - | பயனற்றபொருள் |
| சந்தியில் நிற்றல் | - | ஆதரவின்றி நிற்றல் |
| குடிமுழுகிப்போதல் | - | முற்றும் அழிதல் |
| கை துடைத்தல் | - | முழுவதுமாக விலக்குதல் |

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| இல்லம் | - | வீடு | - | නිවස |
| வேந்தன் | - | மன்னன் | - | රජතුමා |
| சினம் | - | கோபம் | - | කෝපය |
| கடல் | - | சமுத்திரம் | - | මුහුද |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொய் | - | மெய் | - | ඇත්ත | - | බොරු |
| இளமை | - | முதுமை | - | තරුණ | - | මහලු |
| இரவு | - | பகல் | - | රාත්‍රිය | - | දහවල |
| சிறிய | - | பெரிய | - | පොඩි | - | ලොකු |
| நன்மை | - | தீமை | - | හොඳ | - | නරක |

# 5 தொலைந்த புத்தகம்

5 ஆசிரியரின் உதவியுடன் உரையாடலைச் செவிமடுங்கள். வாசியுங்கள்.



கவிதா : என்னுடைய புத்தகத்தைக் கண்டீர்களா?

ஜனனி : என்ன புத்தகம்?

கவிதா : என்னுடைய தமிழ்ப் புத்தகம்.

ஜனனி : ஏன் அவசரமாகத் தேடுகிறீர்கள்?

கவிதா : நாளைக்குப் பரீட்சை அதனால்தான் தேடுகிறேன்.

ஜனனி : புத்தகத்தின் மேல் அட்டை என்ன நிறம்?

கவிதா : நீல நிறம்.

ஜனனி : உங்கள் பெயரை எழுதி இருந்தீர்களா?

கவிதா : எழுதியிருந்தேன்.

ஜனனி : அப்படியா? தேடுவோம்.

கவிதா : அந்தப் புத்தகம் எனக்குத் தேவை. ஏனெனில் அதில் நல்ல நல்ல கட்டுரைகள் உள்ளன.

ஜனனி : உங்களுடைய மேசையில் தேடிப் பார்த்தீர்களா?

கவிதா : எல்லா இடமும் தேடிப் பார்த்தேன்.

ஜனனி : யாருக்காவது கொடுத்தீர்களா?

கவிதா : சீ.... சீ... கொடுக்கவில்லை. புத்தக ராக்கையில் பார்ப்போம்.

ஜனனி : ஆ... இங்கே இருக்கிறது. இதுவா?

கவிதா : ஆம்... இதே தான்.நன்றி ஜனனி.



## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| பார்த்தீர்களா? | - | දැක්කා ද? |
| ஏன்? | - | ඇයි? |
| அவசரமாக | - | හදිස්සියෙන් ම |
| சோதனை | - | විභාගය |
| அதனால் | - | ඒ නිසා |
| தேடுகிறேன் | - | සොයනවා |
| மேல் அட்டை | - | පිට කවරය |
| உறை | - | කවරය |
| இல்லாவிட்டால் | - | නැතහොත් |
| வேறு | - | වෙනත් |
| தேடி எடுப்போம் | - | සොයා ගනිමු |
| தான் | - | තමයි |
| எப்படியாவது | - | කොහොම හරි |
| தேவைப்படும் | - | අවශ්‍ය වේ |
| தவிர | - | හැර |
| ஏனெனில் | - | මන්ද යත් |
| கட்டுரைகள் | - | රචනා |
| யாருக்காவது | - | කාහට හෝ / කාට හරි |
| வீட்டு வேலை | - | ගෙදර වැඩ |
| ஆனால் | - | නමුත් |

## செயற்பாடு 1

⑥

**உரையாடலை மீண்டும் செவிமடுங்கள். பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.**

1. தொலைந்த புத்தகம் ஓர் ஆங்கிலப் புத்தகமாகும். ☐
2. புத்தகத்தின் மேல் அட்டை பச்சை நிறம். ☐
3. கவிதா புத்தகத்தை நண்பரிடம் கொடுத்தாள். ☐
4. கவிதாவின் புத்தகம் வகுப்பறையில் இருந்தது. ☐
5. கவிதாவின் புத்தகத்தில் கட்டுரைகள் இருந்தன. ☐

## செயற்பாடு 2

நீங்கள் பாடசாலையில் தொலைத்த பொருட்கள் எவை?

1. ...............................
2. ...............................
3. ...............................
4. ...............................
5. ...............................

## செயற்பாடு 3

உரையாடலை மீண்டும் செவிமடுங்கள். இருவர் கொண்ட குழுக்களாக நடித்துக் காட்டுங்கள்.

## செயற்பாடு 4

**பின்வரும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.**

1. உரையாடலில் பங்கு பற்றியவர்கள் யாவர்?

______________________________

2. தொலைந்தது எது?

______________________________

3. புத்தகத்தை அவசரமாகத் தேடியதற்குக் காரணம் என்ன?

______________________________

4. அப் புத்தகத்தில் என்ன எழுதி இருந்தது?

______________________________

## செயற்பாடு 5

**பின்வரும் சொற்களுக்கான எதிர்க் கருத்துச்சொற்களை எழுதுங்கள்.**

1. நண்பன் - ______________________
2. அவசரம் - ______________________
3. நல்லது - ______________________
4. சரியான - ______________________
5. மேல் - ______________________

## செயற்பாடு 6

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.**

1. நாளைக்குப் பரீட்சை **அதனால்** தான் புத்தகத்தைத் தேடுகிறேன்.
2. எல்லா இடமும் தேடினேன். **ஆனால்** கிடைக்கவில்லை.
3. அந்தப் புத்தகம் எனக்கு **எப்படியாவது** தேவை.
4. அந்தப் புத்தகம் **இல்லாவிட்டால்** வேறு புத்தகம் ஒன்றைத் தேடி எடுப்போம்.
5. அதைத் தவிர வேறு புத்தகம் எனக்கு வேண்டாம். **ஏனென்றால்** அதில் பல கட்டுரைகள் காணப்பட்டன.

நிறந்தீட்டப்பட்ட சொற்களை அவதானியுங்கள். இச் சொற்கள் வாக்கியங்களை இணைப்பதற்கு உதவும். இதேபோன்ற வேறு சொற்களும் சில உள்ளன.

| | | |
|---|---|---|
| ஆகையால் | - | ඒ නිසා |
| உம் | - | සහ |
| எனினும் | - | එහෙත් |
| ஆனாலும் | - | එනමුත් |

## செயற்பாடு 7

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்களைச் சேர்த்து எழுதுங்கள்.**

| | |
|---|---|
| **உம்** | **ஏனென்றால்** |
| **அதனால்** | **ஆனால்** |
| **ஆகையால்** | |

1. i. சுஜாதா நன்றாகப் பாடினாள்.
   ii. முதலாம் இடத்தைப் பெற்றாள்.
   ..........................................................................................

2. i. நாங்கள் அதிபரைச் சந்திக்க அலுவலகத்திற்குச் சென்றோம்.
   ii. அதிபரைச் சந்திக்க முடியவில்லை.
   ..........................................................................................

3. i. நான் விரைவாக வீட்டிற்குப் போக வேண்டும்.
   ii. எனது நண்பர்கள் இன்று எங்கள் வீட்டிற்கு வருவார்கள்.
   ..........................................................................................

4. i. மழை தொடர்ந்து பெய்தது.
   ii. என்னால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை.
   ..........................................................................................

5. i. நான் தமிழ் படிக்கிறேன்.
   ii. ஜனனி தமிழ் படிக்கிறாள்.
   ..........................................................................................

## செயற்பாடு 8

**பின்வரும் உதாரணங்களை அவதானியுங்கள். வாக்கியங்களை எழுதுங்கள்.**

**1. ஆகவே**

உதாரணம்

1. நேற்று மழை பெய்தது. ஆகவே நான் விளையாடவில்லை.
2. ....................................................................................
3. ....................................................................................
4. ....................................................................................
5. ....................................................................................

**2. ஏனென்றால்**

உதாரணம்

1. நான் பாடசாலைக்குப் போகவில்லை. ஏனென்றால் எனக்குச் சுகமில்லை.
2. ....................................................................................
3. ....................................................................................
4. ....................................................................................
5. ....................................................................................

**3. உம்**

உதாரணம்

1. ஆசிரியர்களும், மாணவர்களும் சுற்றுலா சென்றார்கள்.
2. ....................................................................................
3. ....................................................................................
4. ....................................................................................
5. ....................................................................................

## செயற்பாடு 9

**பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து பின்வரும் பந்தியை நிரப்புங்கள்.**

அதனால், ஆனாலும், ஆனால், எப்படியாவது

நரேனும், துஷாரவும் சிறந்த நண்பர்கள். இவ்விருவரும் கொழும்பு றோயல் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கிறார்கள். ____________ பாடசாலையில் இவ்விருவரும் வெவ்வேறுபட்ட மொழி மூல மாணவர்கள். ____________ விடுதியில் ஒரே அறையில் இவர்கள் தங்கியிருக்கிறார்கள். ____________ இவர்கள் அனேக வேளைகளில் சேர்ந்து படிப்பார்கள். சாதாரணதரப் பரீட்சையில் ____________ சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும்.

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆணை | - | கட்டளை | - | අණ |
| மின்னின | - | பிரகாசித்தன | - | දිලිසුණේය |
| துயர் | - | துன்பம் | - | දුක |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மகிழ்ச்சி | - | துக்கம் | - | සතුට | - | දුක |
| இலகு | - | கடினம் | - | පහසු | - | අපහසු |
| இலாபம் | - | நட்டம் | - | ලාභය | - | අලාභය |
| உயர்வு | - | தாழ்வு | - | උසස් | - | පහත් |
| சண்டை | - | சமாதானம் | - | යුද්ධය | - | සාමය |

# 6 நலம், நலமறிய ஆவல்

**கடிதத்தைத் தெளிவான உச்சரிப்புடன் வாசியுங்கள்.**

எஸ்.அசேல,
இல 58/ 1,
பிரதான வீதி,
பண்டாரவளை.
06.06.2016.

அன்பு நண்பன் துஷானுக்கு,

நான் நலம். உன் நலம் அறிய ஆவல். உன் சுகத்திற்கும் குடும்பத்தாரின் சுகத்திற்கும் இறைவன் துணை.

துஷான், நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. நான் கேட்டபடி திருகோணமலையைப் பற்றி எழுதியிருந்தாய். மிக்க மகிழ்ச்சி. எனக்குத் திருகோணமலையைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. திருக்கோணேஸ்வரம், நிலாவெளிக் கடற்கரை, வெந்நீர் ஊற்று, புறாமலை என்பனவற்றை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு அடுத்த மாதம் கிடைக்கும் என நினைக்கிறேன்.

ஆம் துஷான், எமது பாடசாலைக் கல்விச் சுற்றுலா அடுத்த மாதம் இருக்கிறது. இம்முறை திருகோணமலைக்கு வர இருக்கிறோம். நான் மட்டுமல்ல. எனது நண்பர்களும் வருகிறார்கள். வரும்போது உனக்கு விருப்பமான எமது உணவு வகைகளைக் கொண்டு வருகிறேன்.

வீட்டில் அம்மா, அப்பா, அக்கா அனைவரையும் அன்புடன் கேட்டதாகக் கூறு. மற்றவை நேரில்.

நன்றி

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்,
அசேல.

## செயற்பாடு 1

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறியுங்கள்.**

1. துஷான் அசேலவுக்குக் கடிதம் எழுதினான். ☐
2. துஷான் கண்டிக்குச் சுற்றுலா செல்லவுள்ளான். ☐
3. அசேல பண்டாரவளையில் இருக்கிறான். ☐
4. அசேல துஷானின் நண்பன் அல்ல. ☐
5. துஷான் அடுத்த மாதம் சுற்றுலா செல்லவுள்ளான். ☐

## செயற்பாடு 2

நீங்கள் உங்களை திருகோணமலையில் வசிக்கும் துஷானாக எண்ணி 75 - 80 சொற்களில் அசேலவுக்கு பதில் கடிதம் ஒன்று எழுதுங்கள்.

## செயற்பாடு 3

வெளிநாட்டில் உள்ள உமது நண்பனுக்கு எமது நாட்டின் சிறப்புப் பற்றி ஒரு கடிதம் எழுதுங்கள்.

## செயற்பாடு 4

**கடிதத்தை உரத்து வாசியுங்கள்.**

க.கதிர்வேல்,
வகுப்புத் தலைவன்,
தரம் - 11,
பதுளை மத்திய கல்லூரி,
பதுளை.

06.09.2016.

அதிபர்,
பதுளை மத்திய கல்லூரி.

கனம் ஐயா,

**கல்விச் சுற்றுலா செல்வது தொடர்பாக,**

நாங்கள் இப்பாடசாலையில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கின்றோம். எமது பாடப்புத்தகத்தில் திருகோணமலையின் சிறப்புப்பற்றிக் கற்றோம். அப்பாடத்தைக் கற்றபின் அவ்விடங்களை நேரடியாகப் பார்க்க விரும்புகிறோம். அவற்றை நேரடியாகப் பார்ப்பது எமக்குப் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.

எனவே, எங்களைத் திருகோணமலைக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
க.கதிர்வேல்,
தரம் 11.

## செயற்பாடு 5

**கடிதத்தை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

1. கடிதம் எழுதப்பட்ட திகதி யாது? ________________________
2. கடிதம் யாரால் எழுதப்பட்டது? ________________________
3. கடிதம் யாருக்கு எழுதப்பட்டது? ________________________
4. கடிதத்தின் விளிப்பு என்ன? ________________________
5. கடிதம் எதற்காக எழுதப்பட்டது? ________________________

## செயற்பாடு 6

**பின்வரும் கடிதத்தை வாசியுங்கள்.**

அதிபர் ,
பொ/ரஜரட்டை வித்தியாலயம்,
பொலனறுவை,
2016.03.15.

பணிப்பாளர்,
மிருகக்காட்சிச்சாலை,
தெஹிவளை.

கனம் ஐயா,

<u>அனுமதி கோரல்</u>

எமது பாடசாலையின் 100 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிட விரும்புகின்றனர். அன்றைய தினம் இலவசமாக மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிட அனுமதிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
அதிபர் .

## செயற்பாடு 7

**கடிதத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. இக்கடிதம் உறவுமுறைக் கடிதமா? தொழில் முறைக் கடிதமா?
2. இக்கடிதம் யாரால், யாருக்கு எழுதப்பட்டுள்ளது?
3. இச்சுற்றுலாவில் எத்தனை ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர்?

## செயற்பாடு 8

உமது பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் பிரதேச சபைத் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.

### சொல் அறிமுகம்

| | |
|---|---|
| நலம் | - සුවෙන් |
| வெந்நீர் ஊற்று | - උණුවතුර ළිං |
| மிருகக்காட்சிச்சாலை | - සත්තුවත්ත |
| கடற்கரை | - මුහුදු වෙරළ |
| பயனுள்ளதாக | - ප්‍රයෝජනවත් ලෙස |
| சுற்றுலா | - චාරිකාව |
| சிறப்பு | - වැදගත්කම |
| பணிப்பாளர் | - අධ්‍යක්ෂතුමා |
| அனுமதிகோரல் | - අනුමැතිය ලබා ගැනීම |
| தயவுடன் | - කාරුණික ව |

## செயற்பாடு 9

உறவு முறைக் கடிதம், தொழில் முறைக் கடிதம் எழுதப்படும் சந்தர்ப்பங்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

## செயற்பாடு 10

**பின்வரும் விளிப்புகளை அட்டவணைப்படுத்துங்கள்.**

1. அம்மாவுக்கு
2. அதிபருக்கு
3. வகுப்பாசிரியருக்கு
4. நண்பனுக்கு
5. பிரதேச சபைத் தலைவருக்கு
6. பேனா நண்பனுக்கு

| உறவு முறைக் கடிதம் | தொழில் முறைக் கடிதம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## செயற்பாடு 11

**பின்வரும் அழைப்பிதழை வாசியுங்கள்.**

**விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா**
**அழைப்பிதழ்**

இடம் - பாடசாலையின் பிரதான மண்டபம்

காலம் - 05.10. 2016 (மு.ப. 10.00 மணி)

தலைவர் - பாடசாலை அதிபர்

பிரதம அதிதி - கௌரவ கல்வி அமைச்சர்

விசேட அதிதிகள் -
* மாகாணக் கல்விப் பணிப்பாளர்
* வலயக் கல்விப் பணிப்பாளர்
* கோட்டக் கல்விப் பணிப்பாளர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
இ /விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

## செயற்பாடு 12

**படங்களைப் பாருங்கள். விழாக்களைக் கண்டறியுங்கள் எழுதுங்கள்.**

பரிசளிப்பு விழா, கலை விழா, பிறந்த நாள் கொண்டாட்டம்,
திருமண வைபவம், சுதந்திர தின விழா
















1. ______________________ 3. ______________________ 5. ______________________

2. பரிசளிப்பு விழா 4. ______________________

## செயற்பாடு 13

உமது பாடசாலையில் நடைபெறவுள்ள வருடாந்த கலை விழாவிற்கு அழைப்பிதழ் ஒன்றினைத் தயாரியுங்கள்.

## செயற்பாடு 14

**உங்கள் விபரங்களைக் கொண்டு விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்துங்கள்.**

முழுப் பெயர் :- ..........................................................................

முதலெழுத்துடன் பெயர் :- ..........................................................

சொந்த முகவரி :- ....................................................................

தொழில் :- ...............................................................................

மாவட்டம் :- ...........................................................................

கிராம சேவகர் பிரிவு :- .............................................................

பிரதேச செயலாளர் பிரிவு :- ......................................................

பிறந்த திகதி :- வருடம் ............... மாதம் ............... திகதி ..........

வயது (2016.10.30 அன்று) வருடம் ....... மாதம் ...... திகதி ..............

தேசிய அடையாள அட்டை இலக்கம் :- .......................................

பால் :- .............................................................

கல்வித் தகைமை :- ...........................................

தொழில்த் தகைமை :- .........................................

வேறு தகைமைகள் :- .........................................

**இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென உறுதிப்படுத்துகிறேன்.**

திகதி ................................ ..........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

## செயற்பாடு 15

**சிங்களத்தில் மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

1. கல்விச் சுற்றுலா செல்வோம்.

   ..................................................

2. உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.

   ..................................................

3. அன்புள்ள அம்மாவுக்கு,

   ..................................................

4. பிரதேச செயலாளருக்கு,

   ..................................................

5. இப்படிக்கு, அன்பு நண்பன்.

   ..................................................

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அன்பு | - | நேயம் | - | ආදරය |
| உண்மை | - | மெய் | - | ඇත්ත |
| காடு | - | வனம் | - | වනාන්තරය |
| உணவு | - | சாப்பாடு | - | ආහාර |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உள்ளே | - | வெளியே | - | ඇතුළේ | - | එළියේ |
| ஏற்றம் | - | இறக்கம் | - | නැගීම | - | බැසීම |
| தண்ணீர் | - | வெந்நீர் | - | ඇල් වතුර | - | උණු වතුර |
| ஞாபகம் | - | மறதி | - | මතක | - | අමතක |
| காய் | - | கனி | - | අමු ගෙඩිය | - | ඉදුණු ගෙඩිය |

# 7 யால தேசிய வனம்

**படங்களைப் பார்த்துக் கலந்துரையாடுங்கள்.**




*யால தேசிய வனத்தில் காணக்கூடிய பிராணிகள் எவை? தமிழில் கலந்துரையாடுங்கள்.*

## செயற்பாடு 1

**தகவல்களை வாசியுங்கள். வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**




**அமைவிடம்** - தெற்கு மற்றும் ஊவா மாகாணங்கள்

**கிட்டிய நகரம்** - அம்பாந்தோட்டை

**நிறுவப்பட்டது** - 1900 *(வன விலங்கு சரணாலயம்)*

1938 *(தேசிய வன விலங்கு)*

**சராசரி வெப்பநிலை** - $26.4^0$ C

**பார்வையிடும் நேரம்** - 5.30 am - 6.00 pm

**கொழும்பிலிருந்து** - 300 Km

**பார்வையிடப் பொருத்தமான மாதம் -** ஜூன் முதல் செப்டெம்பர் வரை

| **பிரிவுகள் - நபர்கள்** | **ஒரு நாள் பகல்** | **ஒரு நாள் முழு இரவு** |
|---|---|---|
| உள்ளூர் - வயது வந்தவர்களுக்கு | 600.00 ரூபாய் | 1200.00 ரூபாய் |
| வெளிநாட்டவர் - வயது வந்தவர்களுக்கு | 15.00 அமெரிக்க டொலர்கள் | 30.00 அமெரிக்க டொலர்கள் |
| உள்ளூர்ச் சிறுவர்களுக்கு (6-12 வயது) | 30.00 ரூபாய் | 60.00 ரூபாய் |
| வெளிநாட்டுச் சிறுவர்களுக்கு (6-12 வயது) | 8.00 அமெரிக்க டொலர்கள் | 16.00 அமெரிக்க டொலர்கள் |

1. எத்தனை மணிக்குத் திறக்கப்படும்?

2. எத்தனை மணிக்கு மூடப்படும்?

3. வளர்ந்தோருக்கான (உள்ளூர்) கட்டணம் எவ்வளவு?

4. வெளிநாட்டுச் சிறுவர்களுக்கான கட்டணம் எவ்வளவு?

5. யால சரணாலயத்தின் சராசரி வெப்பநிலை எவ்வளவு?

6. பார்வையிடப் பொருத்தமான மாதங்கள் எவை?

7. கொழும்பில் இருந்து சரணாலயத்திற்கான தூரம் எவ்வளவு?

## யால தேசிய வனம்

இலங்கையிலுள்ள தேசிய வனங்களுள் யால வனமும் ஒன்று. அதிகளவு சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்துசெல்கிறார்கள். இது பரப்பளவில் இரண்டாவது பெரிய தேசிய வனமாக காணப்படுகிறது.

யால தேசிய வனம் இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. தலைநகரான கொழும்பிலிருந்து கிட்டத்தட்ட 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இது மொத்தமாக 979 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டது. யால தேசிய வனம் 1900 ஆம் ஆண்டில் வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. 1938 இல் தேசிய வனமாக அறிவிக்கப்பட்டது. இலங்கையின் புகழ் பெற்ற தேசிய வனமாக இது காணப்படுகிறது.

வனவிலங்குகளைப் பார்வையிடுவதற்குக் காலை 5.30 முதல் மாலை 6.30 வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். வறட்சி காரணமாக ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 1 முதல் அக்டோபர் 15 வரை சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதில்லை.

இலங்கையில் உள்ள முக்கியமான பறவைகளின் எழுபது வாழிடங்களில் இதுவும் ஒன்றாகும். இத்தேசிய வனம் ஐந்து பிரிவுகளைக் கொண்டதாகும். மேலும், நான்கு பிரிவுகள் இத்தேசிய வனத்துடன் இணைக்கப்பட்டன. யால காட்டைச் சுற்றிவர ஆறு தேசிய வனங்களும், மூன்று வனவிலங்குச் சரணாலயங்களும் உள்ளன.

யால காட்டின் அமைவு திருகோணமலைக்கும் அம்பாந் தோட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இக் காட்டின் உயரம் கடல் மட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட 30 மீற்றர் (98 அடி) ஆகும்.

### பறவைகள்

இக்காட்டில் காணப்படும் 215 பறவை இனங்களில் ஆறு இனங்கள் இலங்கைக்குத் தனிச் சிறப்பானவையாகும். நீர்க் கோழிகள், நீர்க் காகம், நாரை, கொக்கு, அன்னம், பூ நாரை, பெருஞ் சொண்டுப் பறவைகள் போன்ற பல அரிய பறவை இனங்கள் இங்கே காணப்படுகிறன.

### விலங்குகள்

யால தேசிய வனத்தில் திரியும் யானைக் கூட்டம் இலங்கையில் காணப்படும் மிகப் பெரிய யானைக் கூட்டமாகும். இங்கு 44 முலையூட்டி இனங்கள் வாழ்கின்றன. உலகில் அதிக எண்ணிக்கையான சிறுத்தைகளின் வாழிடங்களில் இதுவும் ஒன்றாகும். இத்தேசிய வனத்தில் காணப்படும் யானைகளின் எண்ணிக்கை 300 முதல் 350 வரை ஆகும். மீனவப் பூனை, கொடும்புலி, பொன் மரநாய் போன்ற முலையூட்டி இனங்களும் இங்கு காணப்படுகின்றன.

### ஊர்வன

இக்காட்டில் 46 வகையான ஊர்வன காணப்படுகின்றன. இவற்றுள் இலங்கைப் புடையன், இலங்கைப் பறக்கும் பாம்பு போன்ற 5 இனங்கள் இலங்கைக்குச் சிறப்பானவை. முதலை இனங்களும், ஆமை இனங்களும் காணப்படுகிறன.

### நீர் வாழ்வன

யால காட்டில் நீர் நிலைகளில் 21 நன்னீர் மீன் இனங்கள் வாழ்கின்றன. பல்வேறு வகையான நண்டுகளும், இறால்களும் வாழ்கின்றன.

### சொல் அறிமுகம்

தேசிய வனம் - ජාතික වනෝද්‍යානය

சுற்றுலாப் பயணிகள் - සංචාරකයෝ

வாழிடங்கள் - වාසස්ථාන

வன விலங்குகள் - වන සත්තු

பார்வையாளர்கள் - නරඹන්නෝ

இணைக்கப்பட்டுள்ளன - සම්බන්ධ කරන ලදී

சரணாலயங்கள் - අභය භූමි

ஊர்வன - උරගයින්

நீர் வாழ்வன - ජලජ ජීවීන්

பல்வேறு - නොයෙක්

## செயற்பாடு 2

சோடிகளாக இணைந்து நீங்கள் கற்றவற்றைப் பற்றி உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

## செயற்பாடு 3

**சரி (✓) பிழை (×) இடுங்கள்.**

1. யால தேசிய வனம் இலங்கையிலுள்ள இரண்டாவது பெரிய தேசிய வனம் ஆகும். ☐

2. யால வனம் கொழும்பில் இருந்து கிட்டத்தட்ட 500 கிலோமீற்றர் தொலைவில் காணப்படுகிறது. ☐

3. 1993 மார்ச் முதல் திகதி யால தேசிய வனமானது. ☐

4. யால தேசிய வனம் திருகோணமலைக்கும் கொழும்புக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. ☐

5. யாலக் காட்டில் கிட்டத்தட்ட 215 பறவை இனங்கள் காணப்படுகின்றன. ☐

6. யாலக் காட்டில் கிட்டத்தட்ட 26 நன்னீர் மீன் இனங்கள் வாழ்கின்றன. ☐

## செயற்பாடு 4

**யால தேசிய விலங்கு சரணாலயத்தில் செய்யத்தகாதவை பற்றி கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் இலக்கத்தைத் தெரிந்து குறியீடுகளுக்குப் பொருத்தமான கூட்டுக்குள் குறிப்பிடுங்கள்.**

1. புகைப்படம் எடுக்கத் தடை.
2. வேட்டையாடத் தடை.
3. பிராணிகளுக்கு உணவு வழங்கத் தடை.
4. தொலைபேசி ஒலித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
5. புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
6. வாசனை மிக்க உணவுகளை எடுத்துச் செல்லத் தடை.
7. குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் உணவருந்தவும்.
8. போதைப் பொருட்களை பாவித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.




















## செயற்பாடு 5

7

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுங்கள். வாசியுங்கள். இசையுடன் பாடுங்கள்.**

### மிருகக்காட்சிச்சாலை

*அப்பா என்னை அழைத்துச் சென்றார் அங்கு ஓர் இடம்*
*அங்கிருந்த குயிலும், மயிலும் ஆடித் திரிந்தன*
*பொல்லா நரியும், புனுகுப் பூனையும் எல்லாம் நின்றன*
*குட்டி மான்கள் ஒட்டகச் சிவிங்கி கூட இருந்தன.*

*குரங்கு என்னைப் பார்த்து குறு குறு என்றது*
*யானை ஒன்று காதைக் காதை ஆட்டி நின்றது*
*முதலை தலையைத் தூக்கிப் பார்த்து மூச்சு விட்டது*
*கரடி கூட உறுமிக் கொண்டே காலைத் தூக்கிற்று.*

*சிறுத்தை ஒன்று கோபத்தோடு சீறிப் பார்த்தது*
*அங்கு எங்கள் அருகிலேயே சிங்கம் நின்றது*
*கரடி சிங்கம் புலியைக் கண்டேன் கண்டும் பயமில்லை*
*சூரனைப் போல் நின்றிருந்தேன் துளியும் பயமில்லை.*

*சென்ற அந்த இடம் உனக்குத் தெரியவில்லையா?*
*மிருகக்காட்சிச்சாலை தானே! வேறொன்றுமில்லை.*

***-அழ.வள்ளியப்பா***

## செயற்பாடு 6

**விடை எழுதுங்கள்.**

1. அப்பா அழைத்து சென்ற இடத்தில் இருந்த மிருகங்கள் எவை?
2. அங்கிருந்த குயிலும், மயிலும் என்ன செய்தன?
3. யானை என்ன செய்தது?
4. கோபத்தோடு சீறிப்பாய்ந்த மிருகம் எது?
5. அப்பா அழைத்துச் சென்ற இடம் எது?

## செயற்பாடு 7

**படங்களை அவதானியுங்கள். பேசுங்கள்.**

### இளமைப் பெயர்கள்















## செயற்பாடு 8

8

**ஆசிரியர் உதவியுடன் செவிமடுங்கள். சரியான தொனியைத் தெரிவு செய்து கோடிடுவோம்.**

| பிராணிகள் | | தொனிகள் | | |
|---|---|---|---|---|
| 1. கோழி | - | (அ).கொக்கரிக்கும் | (ஆ). கூவும் | (இ). கொத்தும் |
| 2. சேவல் | - | (அ).கூவும் | (ஆ).கூறும் | (இ).கொக்கரிக்கும் |
| 3. மயில் | - | (அ).உறுமும் | (ஆ).அகவும் | (இ).அலறும் |
| 4. குருவி | - | (அ).கீச்சிடும் | (ஆ).சீறும் | (இ).கத்தும் |

5. குயில் - (அ).குரைக்கும் (ஆ).கூவும் (இ).கீச்சிடும்

6. கிளி - (அ).பேசும் (ஆ).பாடும் (இ).கூவும்

7. பாம்பு - (அ).பிளிறும் (ஆ).சீறும் (இ).கொத்தும்

8. பூனை - (அ).பாயும் (ஆ).சீறும் (இ).கத்தும்

9. யானை - (அ).கத்தும் (ஆ).பிளிறும் (இ).சொல்லும்

10. நாய் - (அ).கத்தும் (ஆ).குரைக்கும் (இ).கதறும்

11. ஆடு - (அ).குரைக்கும் (ஆ).கத்தும் (இ).உறுமும்

12. மாடு - (அ).கத்தும் (ஆ).அலறும் (இ).கூவும்

13. அணில் - (அ).பேசும் (ஆ).கீச்சிடும் (இ).அகவும்

14. ஆந்தை - (அ).கத்தும் (ஆ).அலறும் (இ).அகவும்

15. கரடி - (அ).கத்தும் (ஆ).உறுமும் (இ).கனைக்கும்

16. குதிரை - (அ).கனைக்கும் (ஆ).கத்தும் (இ).உறுமும்

17. தவளை - (அ).கத்தும் (ஆ).சொல்லும் (இ).கீச்சிடும்

18. பன்றி - (அ).கத்தம் (ஆ).உறுமும் (இ).கர்ச்சிக்கும்

19. பல்லி - (அ).சொல்லும் (ஆ).பேசும் (இ).கத்தும்

20. நரி - (அ).ஊளையிடும் (ஆ).கத்தும் (இ).குரைக்கும்

21. சிங்கம் - (அ).கர்ச்சிக்கும் (ஆ).சீறும் (இ).உறுமும்

22. புலி - (அ).உறுமும் (ஆ).கர்ச்சிக்கும் (இ).சீறும்

## செயற்பாடு 9

**கீழ்வரும் உரையாடலைத் தனியாக வாசியுங்கள். பின் பாத்திரமேற்று வாசியுங்கள்.**



அப்பா :- அதோ பாருங்கள் யானைக் கூட்டம் ஒன்று! அது எங்களை நோக்கி வருகின்றது.

அம்மா :- அதோ! பாருங்கள். யானைக் குட்டி ஒன்று...

பாலா :- பெரிய யானை பிளிறுது. எனக்குப் பயமாய் இருக்கிறது. அம்மா.

அம்மா :- பயப்பட வேண்டாம்.

சோபா :- தம்பி! தம்பி! அங்கே பாருங்கள். பெரிய பாம்பு ஒன்று. அது சீறுகின்றது.

பாலா :- ஆமாம்... பாம்பு... அதோ பக்கத்தில் குட்டிகளும் இருக்கின்றன.

சோபா :- ஓ... ஓ... கரடி உறுமும் ஓசையும் கேட்கின்றது.

அப்பா :- பாலா, சோபா அங்கே பாருங்கள். மயில்கள் அழகாகத் தோகையை விரித்தாடுகின்றன.

பாலா :- மயில்கள் அகவுகின்றன. அதன் உடலைப் போல குரல் அழகில்லையே அப்பா?

அப்பா :- அது அப்படித்தான். குயில்கள் பார்ப்பதற்கு அழகில்லை ஆனால் அவை இனிமையாகக் கூவும் அல்லவா?

சோபா :-அணில் பிள்ளைகள், பலாப்பழங்களை ரசித்து ருசித்துச் சாப்பிடுகின்றன.

பாலா :- அக்கா! இதோ இங்கே பாருங்கள். கீரிப்பிள்ளை

அப்பா :- அதோ அந்த மரத்தில் ஒரு பொந்து.

பாலா :- அது என்ன பொந்து அப்பா?

அப்பா :- கிளி ஒன்று அருகில் இருக்கிறது. கிளிப் பொந்தாகதான் இருக்கும்.

சோபா :- கிளிக் குஞ்சுகள் தெரிகின்றன.

அம்மா :- யால சரணாலயம் மிகவும் அழகானது.

சோபா
பாலா :- ஓம்... ஓம்... மிக மிக அழகானது.

## செயற்பாடு 10

9

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைச் செவிமடுங்கள். பின்வரும் இடைவெளிகளை நிரப்புங்கள்.**

1. அங்கே இருப்பது யானைக் ____________________
2. பெரிய யானை ____________________
3. பாம்பு ____________________
4. அதோ பக்கத்தில் ____________________ இருக்கின்றன.
5. கரடி ____________________ ஓசை கேட்கிறது.
6. மயில்கள் ____________________
7. குயில்கள் ____________________
8. அணில் ____________________ பலாப் பழங்கள் உண்ணுகின்றன.
9. இங்கே பாருங்கள் கீரிப் ____________________ இருக்கின்றன.
10. கூட்டில் கிளிக் ____________________ இருக்கின்றன.

## செயற்பாடு 11

குழுவாக இணையுங்கள். ஒருவர் பிராணிகளின் ஒலிகளை எழுப்ப ஏனையோர் தொனிகளைக் கண்டு பிடியுங்கள்.

## செயற்பாடு 12

**பின்வரும் இளமைப் பெயர்களை வாசிப்போம்.**

| | | |
|---|---|---|
| கமுகு | - | கன்று, பிள்ளை |
| பனை | - | வடலி |
| நெல் | - | நாற்று |
| வாழை | - | குட்டி |
| தென்னை | - | பிள்ளை, கன்று |
| அணில் | - | குஞ்சு, பிள்ளை |
| ஆடு | - | குட்டி |
| பாம்பு | - | குட்டி |
| கிளி | - | குஞ்சு, பிள்ளை |
| குதிரை | - | குட்டி |
| குரங்கு | - | குட்டி, பறள் |
| கோழி | - | குஞ்சு |
| தவளை | - | குஞ்சு, பேத்தை |
| புலி | - | குட்டி, குருளை |
| பூனை | - | குட்டி, பறள் |
| மான் | - | குட்டி, கன்று |
| மீன் | - | குஞ்சு |
| யானை | - | குட்டி, கன்று |
| பசு | - | கன்று |

## செயற்பாடு 13

**பொருத்தமான சொற்களைக் கொண்டு அட்டவணையை நிரப்புங்கள்.**

**குரங்கு,சிங்கம், அணில்,கோழி, பாம்பு, கரடி, தவளை, மான், ஆடு, குருவி, குதிரை, யானை, குருவி, புலி, நாய், கிளி, பூனை, முயல், மீன், பசு**

| குட்டி | குஞ்சு | பிள்ளை | கன்று |
|---|---|---|---|
| | | | |

## செயற்பாடு 14

**இடைவெளிகளை நிரப்பி பின்வரும் பந்தியை முழுமைப்படுத்துங்கள்.**

பாடசாலை விடுமுறைக்கு நாங்கள் யால சரணாலயத்திற்குச் சென்றோம். அங்கே யானைக் கூட்டம் ஒன்று ______________ சத்தம் கேட்டுப் பயந்தோம். மான்களும், மான் ______________களும் விளையாடின. பெரிய பாம்பு ஒன்றினது ______________ சத்தம் கேட்டுப் பயந்து திரும்பினோம். பாம்புக் ______________ அங்கே இருந்தன. குரங்குகள் ______________களைத் தூக்கிக் கொண்டு மரத்திற்கு மரம் தாவின. அணில் ______________களும், கிளிப் ______________களும் பழங்களை உண்டன. கரடிகளும், புலிகளும் ______________ ஓசைகள் மிகவும் பயங்கரமாக ஒலித்தன.

## செயற்பாடு 15

**குழுக்களாக இணையுங்கள். உங்கள் வகுப்பு மாணவர்களுடன் தேசிய சரணாலயத்திற்குச் செல்லத் திட்டமிடுங்கள். முன்வையுங்கள்.**

1. எங்கு ?
2. எப்போது ?
3. என்ன, என்ன பொருட்களைக் கொண்டு செல்வீர்கள் ?
4. எங்கு தங்குவீர்கள் ?
5. எத்தனை நாள் சுற்றுலா ?

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| புத்தகம் | - | ஏடு | - | පොත |
| வானம் | - | ஆகாயம் | - | අහස |
| அழகு | - | எழில் | - | ලස්සන |
| அண்மை | - | சமீபம் | - | ළඟ |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெரியவர் | - | சிறியவர் | - | වැඩිහිටි | - | බාල |
| புதியது | - | பழையது | - | අලුත් | - | පරණ |
| சுத்தம் | - | அசுத்தம் | - | පිරිසිදු | - | අපිරිසිදු |
| நாகரிகம் | - | அநாகரிகம் | - | ශිෂ්ටාචාර | - | අශිෂ්ටාචාර |

# 8 கலை விழா

**பின்வரும் நிகழ்ச்சி நிரலை வாசியுங்கள். செவிமடுங்கள்.**

**நாலந்தா வித்தியாலயம்**

**பரிசளிப்பு விழா - 2016**

**நிகழ்ச்சி நிரல்**

இடம் : கல்லூரியின் பிரதான மண்டபம்

காலம் : 2016.11. 26

மு.ப. 9.00 - கொடியேற்றம் - பிரதம அதிதி கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள்.

மு.ப. 9.05 - தேசிய கீதம் - 11 ஆம் தர மாணவிகள்.

மு.ப. 9.25 - வரவேற்பு நடனம் - 10 ஆம் தர மாணவிகள்.

மு.ப. 9.35 - தலைமை உரை - அதிபர் திரு.எஸ்.பிரியதாச அவர்கள்.

மு.ப. 9.45 - பிரதம அதிதி உரை கௌரவ கல்வி அமைச்சர்.

மு.ப. 10.00 - பரிசளிப்பு நிகழ்வுகள்.

மு.ப. 10.30 - நன்றியுரை - சிரேஷ்ட ஆசிரியர் திரு.ஆர். விக்ரமசிங்க அவர்கள்.

## செயற்பாடு 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. பரிசளிப்பு விழா நடைபெற்ற பாடசாலையின் பெயர் என்ன?
2. பிரதம அதிதியாகக் கலந்து கொள்பவர் யார்?
3. வரவேற்புரையை நிகழ்த்துபவர் யார்?
4. நன்றியுரையை நிகழ்த்துபவர் யார்?
5. இப்பாடசாலையின் அதிபரின் பெயர் என்ன?

## செயற்பாடு 2

10

**நாலந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அறிவிப்பாளர் நிகழ்த்திய உரையைச் செவிமடுங்கள். வாசியுங்கள்.**

**அனைவருக்கும் வணக்கம்,**

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

- விழாவின் முதல் அம்சமாகத் தேசிய கொடியேற்றல் இடம்பெறும். அதற்காகக் கௌரவ கல்வி அமைச்சர் அவர்களை அன்போடு அழைக்கின்றோம்.

- அத்தோடு, தேசிய கீதத்தை இசைப்பதற்காகத் தரம் 11 ஐச் சேர்ந்த மாணவிகளை அன்போடு அழைக்கின்றோம்.

## செயற்பாடு 3

**நாலந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அறிவிப்பாளர் உரையைச் செவிமடுங்கள். பின்வரும் கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளம் இடுங்கள்.**

1. விழாவில் முதல் அம்சமாக வரவேற்புரை நடைபெறுகிறது. ☐
2. தேசிய கொடியை ஏற்ற கௌரவ கல்வி அமைச்சர் அழைக்கப்பட்டார். ☐
3. 11 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய கீதத்தை இசைத்தனர். ☐

## செயற்பாடு 4

**பின்வரும் வரவேற்புரையைச் செவிமடுங்கள். வாசியுங்கள்.**

- **விழாவின் அடுத்த அம்சமாக வரவேற்புரை நடைபெறும். வரவேற்புரையை வழங்குவதற்காக எமது பாடசாலையின் பிரதி அதிபர் திரு கே. சுமணதாச அவர்களை அன்புடன் அழைக்கின்றேன்.**

### வரவேற்புரை

இங்கு பிரதம அதிதியாக வருகை தந்துள்ள கௌரவ கல்வி அமைச்சர் அவர்களே! மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் அவர்களே! வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே! ஏனைய கல்வி அதிகாரிகளே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! அனைவருக்கும் வணக்கம்.

எமது பாடசாலையின் அழைப்பினை ஏற்று இங்கு வருகைதந்துள்ள கௌரவ கல்வி அமைச்சர் அவர்களை வருக வருக என வரவேற்கிறோம். அத்தோடு இங்கு வருகைதந்துள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் அவர்களையும், வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களையும் வருக வருக என வரவேற்கின்றோம்.

அத்தோடு, இங்கு வருகைதந்துள்ள அயல்ப் பாடசாலை அதிபர்களையும், பெற்றோர்களையும், மாணவர்களையும் வருக வருக என வரவேற்கின்றோம்.

நன்றி

வணக்கம்.

## செயற்பாடு 5

**பின்வருவனவற்றுள் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. நீங்கள் செவிமடுத்த உரை.

அ. தலைமையுரை ஆ. வரவேற்புரை இ. நன்றியுரை

2. விழாவின் பிரதம அதிதி.

அ. கல்வி அமைச்சர் ஆ. மாகாணக் கல்விப்பணிப்பாளர்
இ. வலயக் கல்விப்பணிப்பாளர்

3. வரவேற்புரையை வழங்கியவர்.

அ. ஆர். விக்ரமசிங்க ஆ. எஸ். பிரியதாச இ. கே. சுமணதாச

## செயற்பாடு 6

**பின்வரும் நன்றியுரையைச் செவிமடுங்கள். வாசியுங்கள்.**

### நன்றியுரை

அனைவருக்கும் வணக்கம்.

எமது அழைப்பினை ஏற்று பரிசளிப்பு விழாவிற்கு வருகைதந்துள்ள கௌரவ கல்வி அமைச்சர் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக் கும், வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும், எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் வருகை தந்த அயல்ப் பாடசா லைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், இவ்விழாவிற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

நன்றி
வணக்கம்.

## செயற்பாடு 7

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இந்த உரை எது பற்றியது?
2. யார் யாருக்கு நன்றி கூறப்பட்டுள்ளது?
3. அயல்ப் பாடசாலைகளில் இருந்து வருகை தந்தோர் யாவர்?

## செயற்பாடு 8

**இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்வோம். வரவேற்புரையை நிகழ்த்துவோம்.**

பெற்றோர், மாகாணக் கல்விச் செயலாளர், பழைய மாணவர்,
மாகாணக்கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சர்

எமது அழைப்பினை ஏற்று இங்கு வருகை தந்துள்ள ........... ......................... **அவர்களை** வருக வருக என வரவேற்கின்றேன். அத்தோடு..................................... **அவர்களையும்,** வருக வருக என வரவேற்கின்றேன். மேலும் .................. **அவர்களையும்,** வருக வருக என வரவேற்கின்றேன். அத்தோடு....................................... **களையும்,** வருக வருக என வரவேற்கின்றேன்.

நன்றி.

வணக்கம்.

## செயற்பாடு 9

**இடைவெளியை நிரப்புவோம். நன்றியுரை நிகழ்த்துவோம்.**

எமது ...................................... இங்கு வருகை தந்துள்ள கல்வி அமைச்சர் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்தோடு மாகாணக் கல்விச் செயலாளர் அவர்களுக்கும் .............. தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் ......................................... ......... நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு ............. ...................... அவர்களுக்கும் எமது நன்றியைத் ........................... ..............மேலும், ........................ அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி. வணக்கம்.

## செயற்பாடு 10

*உங்கள் பாடசாலையில் நடைபெறவுள்ள கலை விழாவிற்கு நிகழ்ச்சி நிரல் ஒன்றினைத் தயாரியுங்கள். (குழு நிலையில்)*

## செயற்பாடு 11

**பின்வரும் நபர்கள் உங்கள் பாடசாலைக் கலை விழாவிற்கு வருகை தந்துள்ளார்கள் என நினைத்து; வரவேற்புரையைக் குழுக்களாகச் சேர்ந்து எழுதுங்கள்.**

- பிரதம அதிதி - மாகாணக் கல்வி அமைச்சர்
- விசேட அதிகள் - மாகாணக் கல்விப் பணிப்பாளர்
  - வலயக் கல்விப் பணிப்பாளர்
  - கோட்டக் கல்விப் பணிப்பாளர்

## செயற்பாடு 12

ஒவ்வொரு குழுவும் எழுதிய வரவேற்புரையை நிகழ்த்திக் காட்டுங்கள். ஏனைய குழுக்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

## செயற்பாடு 13

10

**ஆசிரியர் உதவியுடன் செவிமடுங்கள்; வாசியுங்கள்.**

***அடுத்தாகத் தலைமையுரை இடம்பெறவுள்ளது. அதற்காக எமது பாடசாலையின் அதிபர் அவர்களை அன்போடு அழைக்கின்றோம்.***

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களுக்கும், அயல்ப் பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் வணக்கம். எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். எமது பாடசாலை மாணவர்கள் பல துறைகளில் திறமையானவர்கள். அந்தத் திறமைகள் பள்ளிப் பருவத்தில் வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவரது திறமைக்கும், பாடசாலைகள் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவேண்டும். அந்த வகையில் எமது பாடசாலை மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கும் முகமாகவே இந்தப் பரிசளிப்பு விழா நடைபெறுகிறது. இவர்கள் கடந்த காலங்களைவிட எதிர்காலத்தில் மேலும் திறமைகளை வெளிக்காட்ட வேண்டும். நிச்சயம் வெளிக்காட்டுவார்கள். சிறந்த பெறுபேறு எடுப்பார்கள். சாதனைகள் பல படைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

## சொல் அறிமுகம்

பிரதம அதிதியாக - ප්‍රධාන අමුත්තා ලෙස

மாகாணக்கல்வித் திணைக்களத்தின் - පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුවේ

பணிப்பாளர் - අධ්‍යක්ෂතුමා

வலயக் கல்விப் பணிப்பாளர் - කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂතුමා

பெற்றோர்கள் - දෙමාපියන්

பழைய மாணவர்கள் - ආදි ශිෂ්‍යයින්

வருகை தந்துள்ள - පැමිණි

அயல்ப் பாடசாலை - අසල්වැසි පාසල

அழைப்பினை - ආරාධනාව

கலை விழாவிற்கு - කලා උලෙළ

இவ் விழாவுக்கு - මෙම උත්සවයට

ஒத்துழைப்பு - අනුග්‍රහය

பரிசளிப்பு விழா - ත්‍යාග ප්‍රදානෝත්සවය

## செயற்பாடு 14

**பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்தைத் தரும் சொற்களைத் தலைமை யுரையில் இருந்து தெரிந்து எழுதுக.**

1. புதிய - ____________________
2. வேண்டாம் - ____________________
3. அவநம்பிக்கை - ____________________
4. இல்லை - ____________________
5. துக்கம் - ____________________
6. சில - ____________________
7. அழிவு - ____________________

## செயற்பாடு 15

**பின்வரும் சொற்களின் ஒத்த கருத்தைத் தரும் சொற்களைத் தலைமையுரையிலிருந்து தெரிந்து எழுதுக.**

1. பள்ளி - ____________________
2. ஆற்றல் - ____________________
3. சந்தோசம் - ____________________
4. குரு - ____________________

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| உடம்பு | - | தேகம் | - | ශරීරය |
| மகன் | - | புதல்வன் | - | පුතා |
| விருப்பு | - | ஆசை | - | ආශාව |
| ஆரம்பம் | - | தொடக்கம் | - | ආරම්භය |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆக்கம் | - | அழிவு | - | ඇතිකිරීම | - | නැතිකිරීම |
| செல்வம் | - | வறுமை | - | පොහොසත් | - | දුප්පත් |
| விருப்பு | - | வெறுப்பு | - | කැමැත්ත | - | අකැමැත්ත |
| வரவு | - | செலவு | - | අය | - | වැය |

# 9 சிறுவனின் மதிநுட்பம்

**படங்களையும், நிகழ்வுகளையும் அவதானியுங்கள். கலந்துரையாடி, உங்கள் கருத்துக்களை முன்வையுங்கள். நடித்துக் காட்டுங்கள்.**




காவலர்கள் தெனாலிராமனின் மகன்




தெனாலிராமன் காவலர்கள்







தந்தை (தெனாலிராமன்)






மன்னன்



## செயற்பாடு 1

**படங்களின் ஒழுங்கிற்கு ஏற்ப, பந்திகளின் முடிவில் உள்ள கட்டங்களில் பட இலக்கங்களை இடுங்கள். பட இலக்கங்களுக்கு ஏற்ப, பந்திகளை ஒழுங்குப்படுத்தி வாசியுங்கள்.**

அவர்களோ! **''உங்கள் மகன் ரோஜாப் பூக்களைத் திருடியபோது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களைப் பார்''** என்று அவன் கைகளைக் காண்பிக்கச் செய்தனர்.

தெனாலிராமனின் மகன் தந்தை கூறியதை யோசிக்கத் தொடங்கினான். உடனே ஒவ்வொரு பூக்களாகச் சாப்பிட ஆரம்பித்தான். துணி மூடி இருப்பதனால், அவன் பூக்களைச் சாப்பிடுவதைக் காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு சமயம் அரபுநாட்டு அரசர் ஒருவர் கிருஷ்ணதேவராயருக்கு அதிசய ரோஜாச் செடி ஒன்றைப் பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.

சிறிது காலத்திற்குப் பிறகு அந்தச் செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந்தன. அங்கு வந்த தெனாலிராமனின் மகன் அப்பூக்களைத் தனது தாய்க்குப் பரிசாகக் கொடுக்க நினைத்துப், பூக்களைப் பறிக்கத் தொடங்கினான். பூக்களைப் பறித்துக்கொண்டு இருக்கும்போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்டனர்.

தெனாலிராமனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் தன் மகனைக் காப்பாற்ற விரும்பிய தெனாலிராமன் சிறிது நேரம் யோசித்துத், தான் அணிந்திருந்த மேலாடையைக் கழற்றி மகனின் தலை மேல் போர்த்திவிட்டான். **''இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்தத் துணி என் மகனைக் காப்பாற்றும்''** என்று கூறிவிட்டுச் சென்றார்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலிராமனின் மகனை, அரசர் கிருஷ்ணதேவராயரிடம் காண்பிக்க, அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலிராமன் காவலர்களைப் பார்த்து **''என் மகனை எங்கே அழைத்துக் கொண்டு செல்கிறீர்கள்?''** என்று கேட்டான்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலிராமனின் மகனை, அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னால் அழைத்துச் சென்றனர்.

காவலர்கள் மன்னரைப் பார்த்து **''அரசே! தெனாலிராமனின் மகன் பூக்களைத் திருடியபோது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்த குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்''** என்று கூறினர்.

மன்னரும், எல்லாவற்றையும் கேட்டறிந்து, பின்னர் காவலர்களைப் பார்த்துத் **''திருடிய பூக்கள் எங்கே?''** என்று கேட்டார்.

காவலர்கள் மன்னரைப் பார்த்துப் **''பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளன''** என்று கூறினர்.

மன்னரும் அந்த இரண்டு காவலர்களையும் திட்டி அனுப்பிவிட்டார்.

தெனாலிராமனும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம். என்று சிரித்துக்கொண்டே வீட்டிற்குப் புறப்பட்டனர்.

அரசர் தெனாலிராமனின் மகனைப் பார்த்து **''உன் கைகளைக் காட்டு''** என்று கூறினார்.
அவனும், வெறும் கைகளைக் காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை.
மன்னர் தெனாலிராமனின் மகனைப் பார்த்து, **''நீ பறித்த பூக்கள் எங்கே''** என்று கேட்டார்.

அவனோ! மன்னரைப் பார்த்து, **''நான் பூக்கள் பறிக்கவில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படி செய்தார்கள்''** என்று கூறினான்.

## செயற்பாடு 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுங்கள். எழுதுங்கள்.**

1. அரபு நாட்டு அரசன் கிருஷ்ண தேவராயருக்குப் பரிசாக வழங்கியது எது?
2. தெனாலிராமனின் மகன் தனது தாய்க்குப் பரிசாகக் கொடுக்க நினைத்தது எது?
3. "என் மகனை எங்கே அழைத்துச் செல்கின்றீர்கள்?" என்று காவலாளிகளைப் பார்த்து கேட்டவர் யார்?
4. "திருடிய பூக்கள் எங்கே?" எனக் கேட்டவர் யார்?
5. தெனாலிராமன் தன் மகனைக் காப்பாற்ற என்ன செய்தார்?

## செயற்பாடு 3

**பந்தியில் உள்ள தடித்த எழுத்திலான சொற்களை அவதானியுங்கள். அவற்றிற்கான ஒத்த கருத்துச் சொற்களைக் கலந்துரையாடித் தெரிந்து கொள்ளுங்கள். பந்தியை முழுமையாக மாற்றி எழுதுங்கள்.**

**அரண்மனைக்** காவலர்கள் தெனாலிராமனின் **மகனை அரசர்** கிருஷ்ணதேவராயரிடம் **காண்பிக்க** அழைத்துச் சென்றனர். **செல்லும்** வழியில் தெனாலிராமன் காவலர்களைப் பார்த்து ''என் மகனை எங்கே அழைத்துக் கொண்டு **செல்கிறீர்கள்?''** என்று **வினவினார்.**

அவர்களோ! " உங்கள் மகன் ரோஜாப் **பூக்களைத் திருடியபோது** அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக **அழைத்துச்** செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் **கைகளில்** உள்ள ரோஜாப்பூக்களைப் பார் " என்று அவன் கைகளைக் காண்பிக்கச் செய்தனர்.

## செயற்பாடு 4

**பின்வரும் கூற்றுக்களை வாசியுங்கள். கீழேவரும் படங்களுடன் தொடர்புபடுத்தி, உரிய படங்களுக்குப் பொருத்தமான தமிழ் எழுத்துக்களை இடுங்கள்.**

அ
என் மகனை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? அவன் என்ன தவறு செய்தான்?

ஆ
எங்கே உன் கைகளைக் காட்டு!

இ
என்ன தவறு செய்தீர்கள்? அவனை உடனே விடுவியுங்கள். உங்களைக் கண்டிக்கிறேன்.

ஈ
உன் மகன் ரோஜாப் பூக்களை திருடியபோது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். மன்னரிடம் அழைத்துச் செல்கிறோம்.

உ
இன்று வெயில் அதிகமாக உள்ளதே! இந்தத் துணி உன்னைக் காப்பாற்றும்!

ஊ
அரசே! தெனாலிராமன் மகன் பூக்களைத் திருடியபோது நாங்கள் பிடித்துவிட்டோம். தக்க தண்டனை வழங்க வேண்டும். அரசே!

எ
ஆம், ஆம் அவனைப் பிடிப்போம்
மன்னரிடம் ஒப்படைப்போம்.

ஏ
அவன் கைகளில் உள்ள ரோஜாப்
பூக்களைப் பார்!

ஐ
திருடிய பூக்கள் எங்கே?

ஒ
அதோ! அரண்மனைத்
தோட்டத்தில் தெனாலிராமன்
மகன் ரோஜாப்பூக்களைக்
களவாகப் பறிக்கிறான்.

ஓ
பூக்கள் அனைத்தும் அவன்
கைகளிலேயே உள்ளது அரசே.

ஔ
அரசே! நான் பூக்கள்
பறிக்கவில்லை. என் தந்தைக்கு
அவமானம் ஏற்படுத்தவே
இவர்கள் இப்படிச் செய்தார்கள்.

ஃ
அப்பா ஏதோ என்னைக்
காப்பாற்றவே இதை செய்தார்.
பூக்களைச்
சாப்பிட்டு விடுவோம். இவர்கள்
அறிய முடியாதல்லவா?







## செயற்பாடு 5

12

**ஆசிரியர் உதவியுடன் செவிமடுங்கள். உச்சரிப்புடன் வாசியுங்கள்.**

**பாத்திரம் ஏற்று நடியுங்கள்.**

### சிறுவனின் மதிநுட்பம்

**காட்சி 1**

களம் - அரபு நாட்டு அரசனின் அரண்மனை

பாத்திரங்கள் - அரபுநாட்டு அரசன், கிருஷ்ணதேவராயர், காவலர்கள்

அரபு நாட்டு அரசர் :- மன்னர் கிருஷ்ண தேவராயரே! இது ஓர் அதிசய ரோஜாச் செடி. உங்களுக்காகப் பரிசாகத் தருகிறேன், பெற்றுக் கொள்ளுங்கள்.

கிருஷ்ண தேவராயர்:- மிக நன்றி அரசே! பெற்றுக் கொள்கிறேன். சென்று வருகிறேன்.

அரபு நாட்டு அரசர் :- எல்லாம் நலமாகட்டும்! உங்கள் நட்பு என்றும் நிலைக்கட்டும். சென்று வாருங்கள்.
(கிருஷ்ணதேவராயர் தன் நாட்டுக்கு மீள்கின்றார்)

**காட்சி 2**

களம் - கிருஷ்ணதேவராயரின் அரண்மனை

பாத்திரங்கள் - கிருஷ்ணதேவராயர், மந்திரி பிரதானிகள், ஏவலாளிகள்

கிருணஷ்ணதேவராயர் :- யார் அங்கே? இதோ இந்த ரோஜாச் செடியை எனது அரண்மனைத் தோட்டத்தில் அழகாக நட்டு, நன்றாகப் பராமரியுங்கள்.

காவலர்கள் :- அப்படியே ஆகட்டும் அரசே!
(ரோஜாச் செடியைக் கொண்டு செல்கின்றனர்)
(காலம் கழிகின்றது)

## காட்சி 3

களம் - கிருஷ்ண தேவராயரின் அரண்மனைப் பூந்தோட்டம்

பாத்திரங்கள் - தெனாலிராமனின் மகன், காவலர்கள், தெனாலிராமன்

[தெனாலிராமன் மகன் தன் தாய்க்குப் பரிசாக வழங்க ரோஜாப் பூக்களைப் பறிக்கிறான். அரண்மனைக் காவலர்கள் காண்கின்றனர்.]

காவலர் 1 :- அதோ! அரண்மனைத் தோட்டத்தில் தெனாலி ராமனின் மகன் ரோஜாப்பூக்களைக் களவாகப் பறிக்கிறான்.

காவலர் 2 :- ஆம், ஆம். அவனைப் பிடிப்போம். மன்னரிடம் ஒப்படைப்போம்.
(காவலர்கள் தெனாலிராமனின் மகனை அழைத்துச் செல்கின்றனர். வழியில் தெனாலி ராமன் காண்கின்றான்)

தெனாலிராமன் :- (காவலாளிகளைப் பார்த்து) ''என் மகனை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? அவன் என்ன தவறு செய்தான்?''

காவலர் 1 :- உன் மகன் ரோஜாப்பூக்களைத் திருடியபோது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். மன்னரிடம் அழைத்துச் செல்கிறோம்.

காவலர் 2 :- அவன் கையில் உள்ள ரோஜாப்பூக்களைப் பார்!

தெனாலிராமன் :- (சிந்திக்கிறான்)இன்று வெயில் அதிகமாக உள்ளதே! இந்தத் துணி உன்னைக் காப்பாற்றும்! (தான் போர்த்திருந்த துணியைத் தன் மகனின் தலை மேல் போர்த்தி விடுகிறான்.)

(போர்வைக்குள் இருந்த தெனாலிராமனின் மகன் சற்றுச் சிந்திக்கிறான். பின் தன் கைகளில் இருந்த பூக்கள் அனைத்தையும் உண்டு விடுகிறான்)

## காட்சி 4

களம் - கிருஷ்ணதேவராயரின் அரண்மனை

பாத்திரங்கள் - மன்னர் , மந்திரிகள், தெனாலிராமன்,
தெனாலிராமனின் மகன், காவலர்கள்

[காவலர்கள் தெனாலிராமனின் மகனை மன்னர் முன் நிறுத்துகின்றனர்]

காவலர் 1 :-அரசே! தெனாலிராமனின் மகன் ரோஜாப் பூக்களைத் திருடியபோது நாங்கள் பிடித்து விட்டோம். தக்க தண்டனை வழங்க வேண்டும் அரசே!

மன்னர் :-(காவலர்களைப் பார்த்து) திருடிய பூக்கள் எங்கே?

காவலர் 2 :-பூக்கள் அனைத்தும் அவன் கைகளிலேயே உள்ளன. அரசே!

மன்னர் :-(மன்னர் தெனாலிராமனின் மகனைப் பார்த்து) எங்கே உன் கைகளைக் காட்டு.

தெனாலிராமன் மகன் :-(தன் வெறுங்கைகளைக் காட்டியபடி) அரசே! நான் பூக்களைப் பறிக்கவில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இவர்கள் இப்படிச் செய்தார்கள்.

மன்னர் :-(காவலர்களைப் பார்த்து) என்ன தவறு செய்தீர்கள்? இவனை உடனே விடுவியுங்கள். உங்களைக் கண்டிக்கிறேன்.
(காவலர்கள் தலை குனிந்து நிற்க, தெனாலிராமனும், அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் எனச் சிரித்துக் கொண்டே வீட்டிற்குப் புறப்பட்டனர்.)

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| மன்னன் | - | රජතුමා |
| ரோஜா | - | රෝස |
| பரிசு | - | තෑග්ග |
| காவலர்கள் | - | මුරකරුවෝ |
| அரண்மனை | - | රජමාළිගාව |
| வேண்டுமென்றால் | - | අවශ්‍ය නම් |
| உள்ள | - | තිබෙන |
| இருந்தாலும் | - | නමුත් |
| யோசித்து | - | කල්පනා කර |
| கழற்றி | - | ගලවා |
| வெயில் | - | අව්ව |
| காப்பாற்றும் | - | ආරක්ෂා කරයි |
| ஆரம்பித்தான் | - | පටන්ගත්තේ ය |
| முடியவில்லை | - | නොහැකි විය |
| தண்டனை | - | දඬුවම |
| எங்கே | - | කොහේ ද ? |
| அனைத்தும் | - | සියලු ම |
| காட்டு | - | පෙන්වන්න |
| வெறும் | - | හිස් |
| அவமானம் | - | අපහාසය |
| திட்டி | - | බැනලා |
| எல்லாவற்றையும் | - | සියල්ල ම |
| அதிசயம் | - | පුදුමය |
| விடுவியுங்கள் | - | නිදහස් කරන්න |

## செயற்பாடு 6

**பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தக்கருத்துச் சொற்களை நாடகக் காட்சிகளில் இருந்து தெரிவுசெய்து எழுதுங்கள். இருவர் இருவராக இணைந்து சரிபாருங்கள்.**

**காட்சி 01**

1. புதுமை ______
2. மன்னர் ______
3. வெகுமதியாக ______
4. தேசத்திற்கு ______

**காட்சி 02**

5. இடம் ______
6. மாளிகை ______
7. போகின்றனர் ______

**காட்சி 03**

8. பிடுங்குகிறான் ______
9. பார்க்கின்றனர் ______
10. பாதையில் ______
11. பிழை ______
12. புதல்வன் ______
13. யோசிக்கிறான் ______

**காட்சி 03**

14. கொடுக்க ______
15. எல்லாம் ______
16. கரங்களிலே ______
17. மலர்கள் ______

## செயற்பாடு 7

1. மாணவர்கள் A, B என இரு குழுக்களாகுங்கள்.

2. செயற்பாடு 6 தொடர்பாக அவதானம் செலுத்துங்கள். அதில் உள்ள ஒத்தக்கருத்துச் சொற்களை இரு குழுக்களும் மாறிமாறி வினவி, பதில் கூறுங்கள். அதிக புள்ளிகள் பெற்ற குழுவை வெற்றி பெற்ற குழுவாகத் தெரிவு செய்யுங்கள்.

## செயற்பாடு 8

1. **கதை முடிவில் மன்னர் எவ்வாறு தன் கருத்தை வெளிப்படுத்தினார்,** என்பதைப் பற்றிக் கலந்துரையாடுங்கள். பாத்திரம் ஏற்று நடியுங்கள்.

2. **கதை முடிவில் தெனாலிராமனும் மகனும் தம் உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள்,** என்பதைப்பற்றிக் கலந்துரை யாடுங்கள். பாத்திரம் ஏற்று நடியுங்கள்.

## செயற்பாடு 9

சிறுவர் நாடகப் பிரதியொன்றை ஆக்குங்கள். குழுக்களாக இணைந்து வகுப்பில் நிகழ்த்துங்கள்.

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஐயம் | - | சந்தேகம் | - | සැකය |
| இரத்தம் | - | குருதி | - | ලේ |
| ஒலி | - | சத்தம் | - | නාදය |
| காற்று | - | வளி | - | සුළඟ |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நண்பன் | - | பகைவன் | - | මිතුරා | - | හතුරා |
| கேள்வி | - | பதில் | - | ප්‍රශ්නය | - | පිළිතුර |
| ஆசை | - | நிராசை | - | ආශාව | - | නිරාශාව |
| சிரிப்பு | - | அழுகை | - | සිනහව | - | ඇඬීම |
| நீளம் | - | அகலம் | - | දිග | - | පළල |

# 10 இராமாயணம்

**படங்களைப் பாருங்கள், இராமாயணம் பற்றி உங்களுக்குத் தெரிந்த விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.**













## செயற்பாடு 1

**குழுக்களாக இணையுங்கள். கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள். அகராதியின் உதவியுடன் சொல்லின் பொருளைச் சிங்களத்தில் எழுதுங்கள்.**

- முடிசூட்டடல்
- இதிகாசம்
- வலையில் விழுந்தாள்
- நல்லாட்சி
- குருகுலக் கல்வி
- வரங்கள்
- அறிவுரை
- உயிர்நீத்தார்
- அரியணை
- காலணிகள்
- புத்திரசோகம்
- காலம்கழிந்து
- பணிப்பெண்

## செயற்பாடு 2

**பின்வரும் பந்திகளை வாசியுங்கள். பொருத்தமான தலைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் இலக்கத்தினைக் கூட்டுக்குள் இடுங்கள்.**

குருகுலக் கல்வியை முடித்த இராமன் மிதிலைக்கு இலக்குமணனுடனும், விசுவாமித்திரருடனும் வந்தார். அங்கு ஜனகனின் மகள் சீதையைக் கண்டார். இருவரிடமும் காதல் பிறந்தது. இராமன் சீதையைத் திருமணம் செய்து அயோத்திக்கு அழைத்து வந்தார். ☐

சில காலம் கழிந்தது. தசரதன் தனது மூத்த மகன் இராமனுக்கு முடிசூட்ட எண்ணினார். அனைவரும் மிகவும் மகிழ்ந்தனர். ஆனால், கைகேயியின் பணிப்பெண் கூனி மட்டும் இராமன் அரசனாவதை விரும்பவில்லை. எனவே, அதைத் தடுக்க எண்ணினாள். கைகேயியின் மனதை மாற்றப் பல கதைகள் கூறினாள். இறுதியில் கைகேயி கூனியின் வலையில் விழுந்தாள். முன்னொரு போது தசரதனின் உயிரைக் கைகேயி காத்தாள். அதற்காகத் தசரதனிடம் இருந்து இரு வரங்கள் பெற்றாள். அவ்விரு வரங்களையும் கேட்கும் தருணம் இது எனக் கூனி கூறினாள். ☐

தனது மகன் பரதன் அரசாள வேண்டும். இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும் எனும் இரு வரங்களைக் கைகேயி தசரதனிடம் கேட்டாள். தசரதன் பலவாறு எடுத்துக் கூறியும், கைகேயியின் மனம் மாறவில்லை. வேறு வழியின்றிக் கைகேயியிற்கு வரம் கொடுக்க நேர்ந்தது.

தசரதரின் முடிவைக் கேள்வியுற்ற இராமன் உடனடியாகவே காட்டுக்குக் கிளம்பினான். அவனுடன் சீதையும், இலட்சுமணனும் சென்றனர். தசரதன் ‘‘இராமன் காட்டுக்குச் சென்றான்’’ என்பதை கேள்வியுற்றார். புத்திர சோகம் தாங்காது உயிர் நீத்தார். பரதன் இதைக் கேள்வியுற்றான். நாடு திரும்பினான்.

நடந்தவை அனைத்திற்கும் தனது தாயே காரணம் எனப் பரதன் அறிந்து கோபம் கொண்டான். முடி சூட மறுத்தான். இராமனை அழைத்து வரக் காட்டுக்குச் சென்றான். தந்தையின் சொல்லைக் காப்பாற்ற எண்ணிய இராமன், அயோத்தி வர மறுத்தான். பரதன் இராமனின் பாதணிகளைப் பெற்றுக்கொண்டு அயோத்தி திரும்பினான். அரியணையில் இராமனின் பாதணிகளை வைத்தான். இராமன் காட்டிலிருந்து மீளும் வரை நல்லாட்சி புரிந்தான்.

1. கூனியின் சூழ்ச்சி
2. கைகேயியின் வரம்
3. இராமனின் திருமணம்
4. பரதனின் நல்லாட்சி
5. தசரதனின் இறப்பு

## செயற்பாடு 3

**சரியாயின் சரி (✓)எனவும் பிழையாயின் (×) பிழை இடுக.**

1. இராமன் ஜனகனின் மகளைத் திருமணம் செய்தான். ☐
2. இராமனும், கைகேயியும், சீதையும் காட்டுக்குச் சென்றனர். ☐
3. கைகேயியின் பணிப்பெண் சூர்ப்பனகை. ☐
4. கைகேயி இராமன் பதினாறு ஆண்டுகள் காடாள வேண்டும். என வரம் கேட்டாள். ☐

## செயற்பாடு 4

**பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் தவறான சொற்களை இனங்காணுங்கள். பொருத்தமான சொற்களைக் கொண்டு வாக்கியங்களை எழுதுங்கள்.**

1. ஜனகன் தனது மூத்த மகன் பரதனுக்கு முடி சூட்ட எண்ணினார்.
2. கைகேயியின் தோழி சீதை மட்டும், இராமன் அரசனாவதை விரும்பினாள்.
3. நடந்தவை அனைத்திற்கும் தந்தையே காரணம் எனப் பரதன் மகிழ்ந்தான்.
4. இலக்குமணன் காட்டிலிருந்து மீளும் வரை இராமன் நல்லாட்சி புரிந்தான்.

## செயற்பாடு 5

**கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களை அடிப்படையாகக்கொண்டு, குழுவாக இணைந்து சிறு நாடகம் ஒன்றை ஆக்குங்கள். நடித்துக் காட்டுங்கள்.**

*கதா பாத்திரங்கள் :* ராமன், சீதை, கைகேயி, தசரதன், கூனி, இலக்குமணன்

- ராமனுக்கு முடிசூட்டு விழா.
- மிக்க மகிழ்ச்சி.
- உன் மகனை எப்படியாவது அரசனாக்கு.
- மூடத்தனம் செய்யாதே.
- தருவேன் என்ற என் வரங்களை தந்தருள்க.
- பரதன் அரசனாக வேண்டும்.
- ராமன் காடாள வேண்டும்.
- இது நியாயமில்லை தேவி.
- என் வரம் எனக்கு வேண்டும்
- வரத்தை அருள்கிறேன்.
- வனவாசம் செல்கிறோம் தாயே.
- நானும் வருகிறேன்.

# கம்பன்



கம்பன் என்றொரு மகாகவி தமிழ் இலக்கிய உலகில் வாழ்ந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி 1180 முதல் கி.பி 1250 வரை என்பர். இவர் கவி பாடுவதில் வல்லவர். கம்பரை ''கல்வியிற் பெரியர்'' என்றும் ''கவிச்சக் கரவர்த்தி'' என்றும் அழைப்பார்கள்.

இவர் கி.பி 1180 ஆம் ஆண்டில் சோழ நாட்டில் பிறந்தார். சடையப்ப வள்ளல் இவரை ஆதரித்து வளர்த்தார். கம்பன் காளியின் மீது மிகுந்த பக்தி கொண்டவர். இவருடைய சமகாலப் புலவர்கள் ஒட்டக்கூத்தர், சேக்கிழார் போன்றோர் ஆவர். இவருக்கு ஒரு மகன். அவரது பெயர் அம்பிகாபதி, அவரும் ஒரு சிறந்த கவிஞர். கம்பராமாயணம், சிலையெழுபது, சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, மும்மணிக்கோவை என்பன கம்பரது படைப்புக்களாகும்.

இராமாயணம் இந்தியாவின் தொன்மையான இதிகாசங்களுள் ஒன்று. இதனை மிகப் பெரிய இதிகாசம் என்பர். இதைத் தமிழில் எழுதியவர் கம்பர். கம்பர் கம்பராமாயணம் பாடிப் பெரும் புகழ் பெற்றார்.

கம்பர் பசியுடைய பூனை ஒன்று பாற்கடலைக் கண்டு நக்கிக் குடித்துவிட ஆசை கொண்டது போல தன் முயற்சி என ஒப்பிடுகிறார்.

கம்பராமாயணத்தை எழுத, கம்பனுக்குத் துணையாக இருந்தவர் சடையப்ப வள்ளல். கம்பராமாயணம் மற்றைய இராமாயணங்களை விடவும் இலக்கியச் சிறப்புமிக்கது.

கம்பனைப் போல் சிறந்த கவி தமிழுக்குக் கிடைத்தமை தமிழ் செய்த பாக்கியம். தமிழ் வாழும் மட்டும் கம்பன் பெயர் வாழும்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| முடிந்த | - | අවසන් වූ |
| விரும்பவில்லை | - | අකැමති විය |
| தடுக்க | - | බාධා කරන්න |
| எண்ணினான் | - | සිතුවේ ය |
| மாற்ற | - | මාරු කරන්න |
| வரங்களை | - | වරම් |
| மனம் | - | සිත |
| தாங்காது | - | දරාගත නොහැකි ව |
| உயிர்நீத்தார் | - | මිය ගියේ ය |
| கோபம் | - | කෝපය |
| முடிசூட | - | ඔටුනු පළන්දන්න |
| காப்பாற்ற | - | ආරක්ෂා කරන්න |
| எண்ணிய | - | සිතූ |
| அரியணையில் | - | සිංහාසනයේ |
| மீளும்வரை | - | නිදහස් වනතුරු |
| இலக்கிய உலகில் | - | සාහිත්‍ය ලෝකයේ |
| வல்லவர் | - | දක්ෂයෙකි |
| தொன்மையான | - | ඉතා පැරණි |
| முயற்சியை | - | උත්සාහය |
| துணையாக | - | සහායට |
| மற்றைய | - | අනෙකුත් |

## செயற்பாடு 6

**மேலே தரப்பட்டுள்ள கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள கவிஞரின் விபரங்களை எழுதுங்கள்.**

1. பெயர் :- ____________________
2. காலம் :- ____________________
3. பிறப்பு :- ____________________
4. ஊர் :- ____________________
5. எழுதிய நூல்கள் :- ____________________
6. சமகாலப் புலவர்கள் :- ____________________
7. மகனின் பெயர் :- ____________________
8. ஆதரித்தவர் :- ____________________
9. உயிர் நீத்தது :- ____________________
10. தொழில் :- ____________________

## செயற்பாடு 7

**மேலே உள்ள கட்டுரையை வாசியுங்கள். இறந்தகால வினைச் சொற்களை இனங்காணுங்கள். அவற்றின் வினையடிகளை எழுதுங்கள்.**

1. வாழ்ந்தார் - வாழ்
2. .............................. - ..............................
3. .............................. - ..............................
4. .............................. - ..............................
5. .............................. - ..............................

## செயற்பாடு 8

**கீழ்க் காணும் அட்டவணைகளை அவதானியுங்கள். பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.**

நட, குடி, பார், எடு        மற + ந்த்+ஏன் - மறந்தேன்

| அ, இ, ஐ | | |
|---|---|---|
| அ | பற<br>திற<br>பிற<br>________ | + ந்த் |
| இ<br>ஐ | படி<br>வை<br>தை<br>________ | + த்த் |
| ர் | சேர்<br>வளர்<br>________ | + த்த் |
| உ | கொடு<br>________ | + த்த் |

நான் - ஏன்
நாங்கள் - ஓம்
நீ - ஆய்
நீங்கள் - ஈர்கள்
அவர் - ஆர்
அவன் - ஆன்
அவள் - ஆள்
அவர்கள் - ஆர்கள்
அது - அது
அவை - அன

ஓடு, விழு, கூப்பிடு, பெய்        ஆடு+இன்+ஆய் > ஆடினாய்

| உ | | |
|---|---|---|
| டு | ஆடு - உ<br>பாடு - உ<br>________ | +இன் |
| ழு | எழு<br>________ | +ந்த் |
| டு | சாப்பிடு<br>போடு<br>சுடு<br>________ | +ட்ட் |
| ய் | செய்<br>________ | +த் |

நான் - ஏன்
நாங்கள் - ஓம்
நீ - ஆய்
நீங்கள் - ஈர்கள்
அவர் - ஆர்
அவன் - ஆன்
அவள் - ஆள்
அவர்கள் - ஆர்கள்
அது - அது
அவை - அன

கல், தா, கொண்டிரு　　போ+ன்+ஓம் > போனோம்

| | | |
|---|---|---|
| ல் | வில்<br>________<br>நில் | +ற்ற்<br>+ற்ற்<br>+ன்ற் |
| ள் | கோள்<br>தாழ் | +ட்ட<br>+ட்ட |
| ரு | இரு<br>________ | +ந்த்<br>+ந்த் |
| ஓ<br>ல்<br>று | போ<br>சொல்<br>பெறு | +ன்<br>+ன்ன்<br>+ற்ற் |
| ஆ | வா > வ<br>________<br>கொண்டுவா<br>கொண்டுவ | +ந்த்<br>+ந்த்<br>+ந்த் |

நான் - ஏன்
நாங்கள் - ஓம்
நீ - ஆய்
நீங்கள் - ஈர்கள்
அவர் - ஆர்
அவன் - ஆன்
அவள் - ஆள்
அவர்கள் - ஆர்கள்
அது - அது
அவை - அன

## செயற்பாடு 9

**பொருத்தமான சொற்களை இடைவெளிகளில் இடுங்கள். வினைச் சொற்கள் ஆக்குங்கள்.**

திற, வாசி, கதை பார், நில், செய், பாடு, குடி, பற

| | | | |
|---|---|---|---|
| அ | ________<br>________<br>________ | + ந்த் | நான் ________<br>அவர் ________<br>அது ________ |
| இ | ________<br>________<br>________ | + த்த் | அவை ________<br>அவள் ________<br>நீ ________ |
| ர் | ________ | + த்த் | அவன் ________ |
| ல் | ________ | + ன்ற் | நீங்கள் ________ |

## செயற்பாடு 10

**நண்பனிடம் கேட்டு அறியுங்கள், எழுதுங்கள்.**

| **வினாக்கள்** | **நான்** | **நண்பன்** |
|---|---|---|
| 1. நீங்கள் நேற்று என்ன குடித்தீர்கள்? | பால் குடித்தேன். | ____________ |
| 2. நீங்கள் நேற்று எத்தனை மணிக்குப் பாடசாலைக்கு வந்தீர்கள்? | 7 மணிக்கு வந்தேன். | ____________ |
| 3. நீங்கள் நேற்று எங்கே போனீர்கள்? | கோயிலுக்குப் போனேன். | ____________ |
| 4. நீங்கள் நேற்று என்ன படம் பார்த்தீர்கள்? | தமிழ்ப் படம் பார்த்தேன். | ____________ |
| 5. நீங்கள் நேற்று இரவு என்ன சாப்பீட்டீர்கள்? | இடியப்பம் சாப்பிட்டேன். | ____________ |
| 6. நீங்கள் நேற்று என்ன வாங்கினீர்கள்? | புத்தகம் வாங்கினேன். | ____________ |
| 7. நேற்று நீங்கள் என்ன பாட்டுக் கேட்டீர்கள்? | நேற்று "சின்ன சின்ன ஆசை" பாட்டுக் கேட்டேன். | ____________ |
| 8. நீங்கள் நேற்று எத்தனை மணிக்கு நித்திரை கொண்டீர்கள்? | 10 மணிக்கு நித்திரை கொண்டேன். | ____________ |



## செயற்பாடு 11

**கீழே தரப்பட்டுள்ள சொற்களை அடிப்படையாகக்கொண்டு நீங்கள் நேற்று செய்த செயல்களை உங்கள் நண்பரிடம் வினவுங்கள்; விடையளியுங்கள்.**

எழு, குளி, செய், தூங்கு, கேள், சாப்பிடு, குடி, பார்

நட, வா, போ, வாங்கு, பேசு, கேள், சிரி

- நேற்று நீங்கள் என்ன குடித்தீர்கள்?
- நான் நேற்றுப் பாயாசம் குடித்தேன்.

...................................................................

...................................................................

## செயற்பாடு 12

**பின்வரும் விபரங்களை அடிப்படையாகக்கொண்டு இவரைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.**

**பெயர்** :- ஆவுல் பக்கிர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம்

**பிறந்த திகதி** :- 15. 10.1931

**தாய்** :- ஆஷியம்மா

**தந்தை** :- ஜைனுலாபுதீன்

**பிறந்த இடம்** :- தமிழ் நாடு இராமேஸ்வரம்

**ஆரம்பக்கல்வி** :- இராமேஸ்வரம் தொடக்கப் பள்ளி

**நாடு** :- இந்தியா

**எழுதிய நூல்கள்** :- அக்கினிச் சிறகுகள் (1999)/இந்தியா 2020 (1998)

**குடியரசுத்தலைவராகப் பணியாற்றிய காலம்** :- 2002 - 2009 வரை

**விஞ்ஞான சாதனைகள்**:-விமான வடிவமைப்பு, உள்நாட்டுச் செயற்கை கோளை முதல் முதலில் விண்ணில் ஏவியமை, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை களை உருவாக்கியமை, அணு ஆயுத சோதனைகள்.

## செயற்பாடு 13

**கீழ்காணும் பந்தியைச் சிங்கள மொழியில் பெயர்த்து எழுதுங்கள்.**

இந்தியாவின் பிரபல்யமான கல்வி நிறுவனமொன்றில் 27.07.2015 ஆம் ஆண்டு விரிவுரையாற்றிக் கொண்டிருந்த கலாநிதி அப்துல் கலாம் திடீர் என்று மயங்கி விழுந்தார். தாமதமின்றி தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இருந்தும், சிகிச்சை பலனளிக்காது காலமானார். இவரது இறுதிச் சடங்கு இராமேஸ்வரத்தில் முழு இராணுவ மரியாதையுடன் இடம் பெற்றது.

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மணம் | - | வாசனை | - | සුවඳ |
| மன்றம் | - | சங்கம் | - | සංගමය |
| பாதை | - | வீதி | - | මාර්ගය |
| கடவுள் | - | இறைவன் | - | දෙවියෝ |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மரியாதை | - | அவமரியாதை | - | ගෞරවය | - | අගෞරවය |
| அடி | - | நுனி | - | මුල | - | අග |
| இயற்கை | - | செயற்கை | - | ස්වාභාවික | - | කෘත්‍රිම |
| இறப்பு | - | பிறப்பு | - | උපත | - | විපත |
| உண்மை | - | பொய் | - | ඇත්ත | - | බොරුව |

# 11 தீபாவளி

**படங்களைப் பாருங்கள். கலந்துரையாடுங்கள். விழாக்களை இணங்காணுங்கள். பொருத்தமாக இணையுங்கள்.**



ஈஸ்டர்



தைப்பொங்கல்



புது வருடம்



நத்தார்



ரம்ழான்



தீபாவளி

# தீபாவளி

தீபாவளி இந்துக்களின் பிரதான பண்டிகைகளில் ஒன்று. தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்றும் பொருள்படும். வாழ்வில் இருள் அகற்றி ஒளியேற்றும் நாளாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

முன் ஒரு காலத்தில் நரகாசுரன் என்னும் ஓர் அரசன் வாழ்ந்து வந்தான். அவன் தீய குணமுடையவன். இவன் தேவர்களை மிகவும் துன்புறுத்தினான். துன்பம் தாங்காத தேவர்கள் கிருஷ்ண பகவானிடம் முறையிட்டனர். கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்தார். தேவர்கள் மகிழ்ந்தனர். நரகாசுரனை அழித்த நாளையே தீபாவளி நாளாகக் கொண்டாடுகின்றனர். தீபாவளி ஐப்பசி மாதம் கொண்டாடப்படுகின்றது. தீபாவளித் திருநாள் ஆணவத்தின் அழிவையும், தர்மத்தின் எழுச்சியையும் உணர்த்துகின்றது.



தீபாவளித் தினத்தன்று அதிகாலையில் எழுவார்கள்; நீராடுவார்கள்; பாரம்பரிய உடைகளை அணிவார்கள். இனிப்புக்களை உறவினர்களுடனும், அயலவர்களுடனும் பரிமாற்றிக் கொள்வர்; பட்டாசு வெடித்து மகிழ்வார்கள்; பரிசுகள் வழங்கி மகிழ்வார்கள்; பெரியோரை வணங்கி வாழ்த்துப் பெறுவார்கள்.

தீபாவளி விழா ஒற்றுமையை வளர்க்கின்றது. மக்களின் மனதில் நற்பண்புகளை உருவாக்குகின்றது. பரிமாற்றிக் கொள்ளும் அன்பு வார்த்தைகள் மனதில் நற்பண்பை விதைக்கும். எனவே தீபங்கள் ஏற்றி, இருள் அகற்றி இன்பம் பொங்கும் தீபாவளி நன் நாளை இந்துக்கள் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| தீபங்களின் | - | පහන්වල |
| இருள் | - | අඳුර |
| அகற்றி | - | ඉවත් කර |
| தேவர்கள் | - | දෙවියන් |
| துன்புறுத்தினான் | - | පීඩාවට පත් කළේ ය |
| துன்பம் | - | දුක |
| அழித்து | - | විනාශ කර |
| காத்தார் | - | ආරක්ෂා කළේ ය |
| நீராடுவார்கள் | - | දිය නාති |
| அயலவர்களுடன் | - | අසල්වැසියන් සමග |
| பரிமாற்றி | - | හුවමාරු කර |
| நற்பண்புகளை | - | යහපත් ගුණාංග |
| அன்பு வார்த்தைகள் | - | කාරුණික වදන් |
| தீபங்கள் ஏற்றி | - | පහන් දල්වා |
| இருள் அகற்றி | - | අඳුර ඉවත් කර |

## செயற்பாடு 1

ஆசிரியரின் உதவியுடன் பாடத்தைச் செவிமடுங்கள். வாசியுங்கள்.

## செயற்பாடு 2

**பாடத்தை வாசியுங்கள். விடையளியுங்கள்.**

1. தீபாவளி என்பதன் பொருள் யாது?
2. நரகாசுரனை கிருஷ்ணபகவான் ஏன் அழித்தார்?
3. தீபாவளி எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?
4. தீபாவளித் தினத்தன்று செய்யும் செயல்களைக் குறிப்பிடுங்கள்.
5. தீபாவளியைக் கொண்டாடுவதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?

## செயற்பாடு 3

1. i. குழுக்களாகப் பிரியுங்கள். பின்வரும் பண்டிகைகளில் செய்யும் விடயங்களைச் சேகரித்து எழுதுங்கள்.

   ii. சேகரித்தவற்றை வகுப்பில் முன்வையுங்கள்.

   iii. முன்வைத்த குழுக்கள், ஏனைய குழுக்களிடம் வினாக்களை வினவுங்கள்.

**விழாக்களின் போது நாங்கள் என்ன செய்தோம்?**




தைப்பொங்கல்
ரம்ழான்
நத்தார்ப் பண்டிகை
வெசாக் பண்டிகை

## செயற்பாடு 4

**சோடிகளாக இணையுங்கள்; வினாக்களை எழுப்புங்கள்; பதிலளியுங்கள்.**

வெசாக்/நத்தார்/புதுவருடப்பிறப்பு என்ன செய்வீர்கள்? எங்கே? எப்பொழுது? யாரோடு? எவ்வாறு கொண்டாடுவீர்கள்?







## செயற்பாடு 5

**பின்வருவற்றை வாசியுங்கள்.**

### தொடர் மொழிக்கு ஒரு மொழி

| | |
|---|---|
| **வெள்ளி விழா** | - 25 ஆம் ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா. |
| **பொன் விழா** | - 50 ஆம் ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா. |
| **மணி விழா** | - 60 ஆம் ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா. |
| **பவள விழா** | - 75 ஆம் ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா. |
| **நூற்றாண்டு விழா** | - 100 ஆம் ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா. |
| **அகதி** | - அனைத்து உடைமைகளையும் இழந்தவன். |
| **அநாதை** | - தாய் தந்தை உற்றார் உறவினர் எவரும் இல்லாதவர்கள். |
| **அகராதி** | - அகர வரிசைப்படி தொகுத்து சொற்பொருள் கூறும் நூல். |
| **அபிநயம்** | - மனக் கருத்தை குறிப்பாக விளக்கச் செய்யும் அங்கச் செய்கை. |
| **அரங்கேற்றம்** | - புதிதாக எழுதப்பெற்ற ஒரு நூல் நடனம், நாடகம் முதலியனவற்றை அறிஞர் பலர் கூடிய சபையிலே முதல் முதலில் சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளச் செய்தல். |

## செயற்பாடு 6

**சரியான விடையைத் கீழ்க் கோடிடுக.**

1. அனைத்து உடைமைகளையும் இழந்தவன்.

அ. ஊதாரி

ஆ. அகதி

இ. அகராதி

ஈ. தீர்க்கதரிசி

2. அகர வரிசைப்படி தொகுத்துச் சொற்பொருள் கூறும் நூல்.

அ. புத்தகம்

ஆ. நூல்

இ.அகராதி

ஈ. பத்திரிகை

3. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா.

அ. பவள விழா

ஆ. பொன் விழா

இ. வெள்ளி விழா

ஈ. மணி விழா

4. மனக்கருத்தைக் குறிப்பாக விளங்கச் செய்யும் அங்கச்செய்கை.

அ. அபிநயம்

ஆ. அரங்கேற்றம்

இ. ஈமக்கிரியை

ஈ. தலைமுறை

5. ஒருவர் தன்னைப் பற்றித் தானே கூறும் வரலாறு.

அ. சுய விமர்சனம்

ஆ. சுயசரிதை

இ. சுயநினைவு

ஈ. சுயகருத்து

## செயற்பாடு 7

**பின்வரும் வாக்கியங்களை அவதானிப்போம் வாசிப்போம்.**

1. அம்மா + உம் - அம்மாவும்

   அப்பா + உம் - அப்பாவும்

2. நரகாசுரன் + உம் - நரகாசுரனும்

   கிருஷ்ணன் + உம் - கிருஷ்ணனும்

   தீபாவளி + உம் - தீபாவளியும்

   பொங்கல் + உம் - பொங்கலும்

3. அவன் + உம் - அவனும்

   அவள் + உம் - அவளும்

   மான் + உம் - மானும்

   ஆடு + உம் - ஆடும்

   மாடு + உம் - மாடும்

4. தம்பி + உம் - தம்பியும்

   தங்கை + உம் - தங்கையும்

   பாட்டி + உம் - பாட்டியும்

   புலி + உம் - புலியும்

## செயற்பாடு 8

**பின்வரும் பெயர்ச் சொற்களை உம் சேர்த்து எழுதுங்கள்.**

1. நரி ______
2. காகம் ______
3. பேனை ______
4. புத்தகம் ______
5. சோறு ______
6. அக்கா ______
7. அண்ணா ______
8. பென்சில் ______
9. உணவு ______
10. தேநீர் ______

## செயற்பாடு 9

**உம் சேர்த்து இரு வாக்கியங்கயையும் இணைத்து எழுதுங்கள்.**

1. இராமன் வந்தான்.
   பரதன் வந்தான். → இராமனும், பரதனும் வந்தார்கள்.

2. அப்பா வந்தார்.
   அம்மா வந்தார். ______

3. ஆடு வந்தது.
   மாடு வந்தது. ______

4. தம்பி வந்தான்.
   தங்கை வந்தாள். ______

5. பாடகன் பாட்டுப் பாடுகிறான்.
   பாடகி பாட்டுப் பாடுகிறாள். ______

## செயற்பாடு 10

**சிங்களத்தில் மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

1. தீபாவளியை இந்து மக்கள் கொண்டாடுவார்கள்.

   ......................................................

2. தீபாவளி ஒற்றுமையை வளர்க்கின்றது.

   ......................................................

3. அம்மாவும், அப்பாவும் வீட்டுக்கு வந்தார்கள்.

   ......................................................

4. தீபாவளிக்குப் பட்டாசு போடுவார்கள்.

   ......................................................

5. தீபாவளி ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படுகின்றது.

   ......................................................

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| தாமரை | - | கமலம் | - | නෙළුම් මල |
| ஆண்டு | - | வருடம் | - | වර්ෂය |
| வாசிகசாலை | - | நூலகம் | - | පුස්තකාලය |
| நாள் | - | தினம் | - | දිනය |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உண்டு | - | இல்லை | - | ඇත | - | නැත |
| அகம் | - | புறம் | - | අභ්‍යන්තර | - | බාහිර |
| புகழ்ச்சி | - | இகழ்ச்சி | - | කීර්තිය | - | අපකීර්තිය |
| சாதகம் | - | பாதகம் | - | වාසි | - | අවාසි |

# 12 நான் கண்ட வீதி விபத்து

**பின்வரும் படங்களை அவதானியுங்கள். கலந்துரையாடுங்கள்.**



வெட்டுப்படுதல்



பிரளுதல்



மோதுதல்



முறிதல்



உடைதல்



எரிகாயம் அடைதல்



நீரில் மூழ்குதல்



சறுக்குதல்



விழுதல்

## செயற்பாடு 1

குழுவாக இணைந்து விபத்து ஒன்றை நடித்துக் காட்டுங்கள்.

## செயற்பாடு 2

13

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைச் செவிமடுங்கள், வாசியுங்கள்.**

பொலிஸ் அதிகாரி : ஆ..... என்ன கூட்டம் ? கொஞ்சம் தள்ளி நில்லுங்கள்.

ஒருவர் : ஒரு பெரிய விபத்து சேர்.

பொலிஸ் அதிகாரி : எங்க பார்ப்போம். என்ன நடந்தது ?

ஒருவர் : மோட்டார் சைக்கிள் ஒருவருடன் மோதி விட்டது சேர்.

பொலிஸ் அதிகாரி : விபத்தைக் கண்டவர் யார்?

ஒருவர் : நான் தான் சேர்.

பொலிஸ் அதிகாரி : எப்படி விபத்து நடந்தது ?

ஒருவர் : இவர் மஞ்சள் கோட்டைக் கடக்க நின்றார். வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இவர் மீது மோதியது சேர்.

பொலிஸ் அதிகாரி : மோட்டார் சைக்கிளை நிறுத்தவில்லையா?

ஒருவர் : இல்லை சேர்.

பொலிஸ் அதிகாரி : அப்போது என்ன நடந்தது?

ஒருவர் : மோட்டார் சைக்கிள் இவர் மீது மோதிக் கீழே விழுந்தார்.

பொலிஸ் அதிகாரி : மோட்டார் சைக்கிள் சாரதி எங்கே?

ஒருவர் : அதோ! அவர்தான் சேர்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| கூட்டம் | - | සෙනඟ |
| விபத்து | - | අනතුර |
| மஞ்சள் கடவை | - | කහ ඉර |
| குறைக்கப்பட்டது | - | අඩුකරන ලදි |
| பிறகு | - | පසු ව |
| பாதசாரி | - | මගියා |
| முயற்சித்தார் | - | උත්සාහ කළේ ය |
| கண்டீர்களா? | - | දුටුවා ද? |
| சாரதி | - | රියැදුරු |
| மோதியது | - | හැපුණේ ය |

## செயற்பாடு 3

**படங்களைப் பாருங்கள். நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள். சரியான ஒழுங்கிற்கு ஏற்ப இலக்கமிடுங்கள்.**









## செயற்பாடு 4

உரையாடலை மீண்டும் செவிமடுங்கள். சோடியாக இணைந்து வாசியுங்கள்.

## செயற்பாடு 5

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுங்கள்.**

1. பொலிஸ் அதிகாரி வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டினார். ☐
2. பாதசாரி மஞ்சள் கடவையின் அருகில் நின்றார். ☐
3. மோட்டார் சைக்கிள் சாரதி ஓடி விட்டார். ☐
4. மோட்டார் சைக்கிள் சாரதி வண்டியை நிறுத்தினார். ☐
5. கூட்டத்தில் ஒருவர் முதலில் விபத்தைக் கண்டார். ☐

## செயற்பாடு 6

**உரையாடலைச் செவிமடுங்கள். வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. இந்த உரையாடலில் பங்குபற்றியவர்கள் யார்?
2. மஞ்சள் கடவை அருகில் நின்றவர் யார்?
3. விபத்து யாரால் ஏற்பட்டது?
4. மோட்டார் சைக்கிளினால் மோதப்பட்டவர் யார்?
5. பாதசாரி என்ன செய்தார்?

## செயற்பாடு 7

**கலா வாசித்த விபத்தை நீங்களும் வாசியுங்கள்.**



நான் இன்று காலை பாடசாலைக்கு வந்து கொண்டிருந்தேன். மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாக வந்தது. ஒரு பாதசாரி மஞ்சள் கோட்டைக் கடக்க முற்பட்டார். அப்போது மோட்டார் சைக்கிள் அவரை மோதியது. அதனால் பெரும் விபத்து ஒன்று ஏற்பட்டது. அந்த இடத்திற்குப் பொலிஸ் அதிகாரிகள் **வரவழைக்கப்பட்டார்கள்.** பொலிஸ் அதிகாரி ஒருவரால் கேள்விகள் **கேட்கப்பட்டன.** அதற்குப் பாதசாரி ஒருவரால் பதில் **கூறப்பட்டது.** பின்பு மோட்டார் சைக்கிள் சாரதி **கைது செய்யப்பட்டார்.** கையில் விலங்கு **பூட்டப்பட்டது.** பொலிஸ் வாகனத்தில் **ஏற்றப்பட்டார்.** பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு **செல்லப்பட்டார்.**

## செயற்பாடு 8

**பின்வரும் செயப்பாட்டுவினைச் சொற்களை அவதானியுங்கள்.**

உதாரணம் 1. குறைக்கப்பட்டது -

குறைக்க + ப் + படு + ட்ட + அது

2. தள்ளப்பட்டது.

தள்ள + ப் + படு + ட்ட் + அது

**பின்வரும் செய்வினைச் சொற்களை அவதானியுங்கள். வாசியுங்கள்.**

கண்டார்

விட்டார்

செய்தார்

நடந்தார்

கேட்டது

கூறியது

## செயற்பாடு 9

**பின்வ ரும் செய்வினைச் சொற்களைச் செயப்பாட்டு வினைச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்.**

உதாரணம்

கொடுத்தார்

கொடுக்க + ப் +படு + ட்ட + அது

1. செய்தார் - ____________________
2. வாங்கினார் - ____________________
3. எழுதினார் - ____________________
4. பிடித்தார் - ____________________
5. திறந்தார் - ____________________

## செயற்பாடு 10

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து எழுதுங்கள்.**

1. லொறியில் மோதிய சைக்கிள் தூக்கி வீசப்பட்டது.

   ……………………………………………………………

2. காய்கறி வண்டியை வாகனம் மோதியது.

   ……………………………………………………………

3. விபத்தை எங்கள் தம்பி கண்டார்.

   ……………………………………………………………

4. வாகனச் சாரதியைப் பொலிஸார் பிடித்தனர்.

   ……………………………………………………………

5. கந்தனின் விரல் கத்தியால் வெட்டப்பட்டது.

   ……………………………………………………………

6. வியாபாரி பொருட்களை விற்றார்.

   ……………………………………………………………

7. ஓவியர் அழகான ஓவியங்களை வரைந்தார்.

   ……………………………………………………………

8. விபத்தைக் கூட்டத்தில் ஒருவர் கண்டார்.

   ……………………………………………………………

## செயற்பாடு 11

**பின்வரும் சொற்கூட்டத்திலிருந்து சொற்களைத் தெரிவு செய்து சிறு சம்பவம் ஒன்றினை விபரியுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| வேகமாக | பாதை | கூட்டம் | ஓடினார்கள் |
| மெல்ல | சாரதி | இரத்தம் | வந்தது |
| புதிய | காயம் | கடந்தேன் | கூடினார்கள் |
| சிவப்பு | வாகனம் | கண்டேன் | முறிந்தது |
| நான் | மக்கள் | அடிபட்டது | கொட்டியது |

## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| வியாபாரி | - | வர்த்தகர் | - | ව්‍යාපාරිකයා |
| நெருப்பு | - | தீ | - | ගින්දර |
| பரீட்சை | - | சோதனை | - | විභාගය |
| இறுதி | - | முடிவு | - | අවසානය |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அதிஷ்டம் | - | துரதிஷ்டம் | - | වාසනාව | - | අවාසනාව |
| சாத்தியம் | - | அசாத்தியம் | - | විය හැකි | - | නොවිය හැකි |
| அவசியம் | - | அநாவசியம் | - | අවශ්‍ය | - | අනවශ්‍ය |